தமிழ்நாடு ● மகளிர் மேம்பாட்டு ●

முற்றம்

விலை ரூ. 15/– மலர் 20 - இதழ் 07 – நவம்பர் 2018 | Price : Rs. 15/- Vol : 20 - Issue : 07 - November 2018

ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை | RURAL DEVELOPMENT & PANCHAYAT RAJ DEPARTMENT

தீன்தயாள் உபாத்தியாய கிராமின் கௌசல்யா யோஜனா திட்டத்தின் கீழ் கருத்தரங்கு

தெற்கு பிராந்திய மாநிலங்களுக்கான ஆய்வுக் கூட்டம்

தமிழகத்திற்கு கென்யா நாட்டினரின் களப்பயண வருகை

திரு. பிரவீன் பி நாயர், இ.ஆ.ப.,
முதன்மை செயல் அலுவலர்,
தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதார இயக்கம்,
மேலாண்மை இயக்குநர்,
தமிழ்நாடு மகளிர் நல மேம்பாட்டு நிறுவனம்,

அன்புள்ள சுய உதவிக் குழு சகோதரிகளே,

ஆண்களுக்கு நிகராக பெண்களும் எந்தத் துறையிலும் சாதனை படைக்க முடியும் என்பதற்கு சுய உதவிக் குழுப் பெண்கள் எடுத்துக் காட்டாக இருக்கிறார்கள். நான் உங்களின் செயல்பாடுகள் குறித்தும், அவற்றை மேலும் செம்மைப்படுத்துவது குறித்தும் மாதந்தோறும் முற்றம் இதழ் வாயிலாக சில கருத்துக்களை பகிர்ந்து கொள்வது எனக்கு மிகவும் மகிழ்ச்சியைத் தருகிறது.

தற்போது பருவ மழை பெய்யத் துவங்கி விட்டது. இந்த மழை நீரை முறையாகச் சேமித்தால் மட்டுமே கோடைக் காலத்தில் ஏற்படும் குடிநீர் தட்டுப்பாட்டை குறைக்காவும், விவசாயத்தை முழுமையாக மேற் கொள்ளவும் நம்மால் முடியும். இந்த மழைக் காலங்களில் ஏரி, குளம், குட்டை போன்ற நீர் சேமிப்பு ஆதாரங்களை சுத்தமாகவும், முறையாகவும் பராமரிப்பதால் நீர் தட்டுப் பாட்டைக் குறைப்பதுடன், டெங்கு, சிக்கின் குனியா, மலேரியா போன்ற நோய்கள் சமுதாயத்தில் பரவாமல் தடுக்க முடியும். மேலும், பொதுமக்களாகிய நாமும் நாம் வாழும் சுற்றுப்புறத்தை சுத்தமாகவும், தூய்மையாகவும் வைத்துக் கொள்ள வேண்டும்.

டெங்கு, சிக்கின் குனியா, மலேரியா போன்ற நோய்களைப் பரப்பக் கூடிய கொசுக்கள், நம் வீட்டைச் சுற்றி தேங்கி நிற்கும் கழிவு நீர், தேங்காய் மட்டைகள், டயர், பிளாஸ்டிக் பொருட்கள், உரல் போன்றவற்றில் தேங்கக் கூடிய நன்னீரில் தான் உற்பத்தியாகின்றன. எனவே இதுபோன்ற பொருட்களில் நீர் தேங்காதவாறும், வீட்டைச் சுற்றிலும் குப்பைகள் சேராமலும் நாம் வாழும் பகுதி களை சுத்தமாக வைத்துக் கொள்ள வேண்டும்.

இதுபோன்ற நோய்கள் பரவாமல் தடுக்க தமிழக அரசு பல்வேறு நடவடிக்கைகளை எடுத்து வரும் நிலையில், அரசுடன் நாமும் இணைந்து, நாம் வாழும் பகுதிகளை சுத்த மாக வைத்துக் கொள்ள வேண்டும். குறிப்பாக குடிநீரை நன்கு காய்ச்சி வடிகட்டிக் குடித்தல், நீர் சேகரித்து வைக்கும் பாத்திரங்களை சுத்தமாக வைத்துக் கொள்ளுதல், டெங்கு, சிக்கின் குனியா நோய்கள் பரவாமல் இருக்க நிலவேம்பு கசாயம், பப்பாளி இலைச் சாறு போன்றவற்றை பருகுதல், அங்கீகரிக்கப்பட்ட மருத்துவமனையில் பரிசோதனை மற்றும் மருத்துவ சிகிச்சை பெறுதல் போன்றவற்றை நாம் மேற்கொள்ள வேண்டும்.

சுய உதவிக் குழு மகளிரான நீங்கள் இத்தகைய நடவடிக்கைகளை மேற்கொண்டு, வாழ்வில் வளமுடனும், நலமுடனும் வாழ்ந்து, மற்றவர்களுக்கு முன்னுதாரணமாகவும், வழி காட்டியாகவும் இருக்க வேண்டும் எனக் கேட்டுக் கொள்கிறேன்.

வாழ்த்துகளுடன்,

அன்புடன்,

மேலாண்மை இயக்குநர்

உள்ளே...

பாசிப்பருப்பு நெய் உருண்டை 12

மகளிர் சுய உதவிக் குழுக்களின் வெற்றிக் கதைகள் 10

மகளிர் சுய உதவிக் குழுக்களுக்கு கடனுதவி 05

முழு சுகாதார தமிழகம் முன்னோடி தமிழகம் 13

சுனாமிக்குப் பிந்தைய நிலைத்த வாழ்வாதாரத் திட்டம் 27

முதலாம் அரையாண்டு செயல் திட்டம் 30

தமிழகத்திற்கு கென்யா நாட்டினரின் களப்பயண வருகை 31

கவிதை, உடல் நலக் குறிப்புகள், சிறப்புக் கட்டுரைகள், சுய உதவிக் குழுக்கள் சம்பந்தப்பட்ட நிகழ்ச்சிகள் போன்றவை குறித்த விபரங்களை சுய உதவிக் குழு உறுப்பினர்கள் தக்க புகைப்படத்துடன் அனுப்பினால் அவைகளில் தகுதி வாய்ந்தவைகள் முற்றம் இதழில் பிரசுரிக்கப்படும். சுய உதவிக் குழுக்களின் வெற்றிக் கதைகள், குழுவின் செயல்பாடுகள் போன்றவற்றையும் புகைப்படத்துடன் அனுப்பினால், அவைகளும் முற்றம் இதழில் பிரசுரிக்கப்படும். முற்றம் இதழ் குறித்த தங்களின் விமர்சனங்களும், ஆலோசனைகளும் வரவேற்கப்படுகின்றன.

கிராமப்புறங்களில் உள்ள மகளிரை சுய உதவிக் குழுக்களாய் ஒன்றிணைத்து, அவர்களின் பொருளாதார வளர்ச்சிக்கு வித்திடும் மகளிர் திட்டத்தின் செயல்பாடுகளையும், ஊரக வாழ்வாதார இயக்கத்தின் செயல்பாடுகளையும் முற்றம் இதழ் மிகவும் சிறப்பாக வெளியிட்டு வருகிறது.

திருமதி. கீதா ராமச்சந்திரன்,
தமிழ்மகள் மகளிர் சுய உதவிக் குழு,
உடுமலைப்பேட்டை, திருப்பூர் மாவட்டம்

தமிழகத்தை திறந்தவெளி கழிப்பிடம் இல்லாத மாநிலமாக மாற்ற ‘முழு சுகாதார தமிழகம் – முன்னோடி தமிழகம்’ என்ற திட்டத்தை தீட்டி செயல்பட்டு வரும் ஊரக வளர்ச்சித் துறையின் செயல்பாடுகள் முற்றம் இதழில் வண்ணப்படத்துடன் வெளியிட்டு வருவது, விழிப்புணர்ச்சியை ஏற்படுத்தி வருகிறது.

திருமதி. சந்திரா கருப்பையா,
விண்மீன் மகளிர் சுய உதவிக் குழு,
பெரியகுளம், தேனி மாவட்டம்.

முற்றம் இதழில் வெளிவரு தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதார இயக்கம், கிராம வறுமை ஒழிப்புச் சங்கம், ஊராட்சி அளவிலான கூட்டமைப்புகள், மகளிர் சுய உதவிக் குழுக்கள் அகியவற்றின் செயல்பாடுகள் எங்களுக்கு மிகவும் பயனுள்ளவையாகவும், ஊக்குவிப்பதாகவும் உள்ளன.

நிர்வாகிகள் மற்றும் உறுப்பினர்கள்,
சன்னமங்கலம் ஊராட்சி கூட்டமைப்பு,
சன்னமங்கலம், நாகப்பட்டினம் மாவட்டம்.

சுனாமியால் பாதிக்கப்பட்ட தமிழகக் கடற்கரைப் பகுதிகளில் வசிக்கும் மக்களின் வாழ்வாதார வளர்ச்சிக்குப் பல்வேறு வகையான திட்டங்களைத் தீட்டி செயல்படுத்தி வரும் சுனாமிக்குப் பின் நிலைத்த வாழ்வாதாரத் திட்டத்தின் செயல்பாடுகள் குறித்த செயல்பாடுகள் முற்றம் இதழில் சிறப்பாக இடம் பெற்றுள்ளன.

நிர்வாகிகள் மற்றும் உறுப்பினர்கள்,
கடல் புறா மகளிர் சுய உதவிக் குழு,
முட்டம், கன்னியாகுமரி மாவட்டம்.

இப்படிக்கு

மின்னஞ்சல் : wdcmutram@yahoo.com
wdcmutram@gmail.com

www.tamilnadumahalir.org/mutram

ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித்துறை
தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு
முற்றம்
மலர் 20–இதழ் 07 – நவம்பர் 2018– விலை ரூ. 15/–

- கௌரவ ஆசிரியர்
திரு. **பிரவீன் பி. நாயர்,** இ.ஆ.ப.,
முதன்மை செயல் அலுவலர்,
தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதார இயக்கம்
- பதிப்பாளர் மற்றும் ஆசிரியர்
எஸ். சின்னப்பன்
செயலர், முற்றம்
- நிர்வாக ஆசிரியர்கள்
முனைவர். ஜே. யு. சந்திரகலா, இ.ஆ.ப.,
செயல் இயக்குநர்,
தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதார இயக்கம்
ச. ப. கார்த்திகா, இ.ஆ.ப.,
முதன்மை செயல் அலுவலர்,
தமிழ்நாடு ஊரக புத்தாக்கத் திட்டம்
எஸ். ஜானகி,
டி.ஆர்.ஓ. / பொது மேலாளர்
தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதார இயக்கம்
- ஆசிரியர் குழு
கோ. லட்சுமிபதி, கூடுதல் இயக்குநர்
ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை
பா. செல்வராஜன், கூடுதல் இயக்குநர்
தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதார இயக்கம்
ஜா. சம்பத், கூடுதல் இயக்குநர்
தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதார இயக்கம்
ஜே. கணேஷ் கண்ணா, கூடுதல் இயக்குநர்
தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதார இயக்கம்
ஜி. சரஸ்வதி கணேசன், கூடுதல் இயக்குநர்
தமிழ்நாடு ஊரக புத்தாக்கத் திட்டம்
சி. கே. வீரணன், கூடுதல் இயக்குநர்
தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதார இயக்கம்
- பொறுப்பாசிரியர்
சு. மகேஷ்வரன்
மக்கள் தொடர்பு அலுவலர்
- துணை ஆசிரியர் முற்றம்
ஏ. கண்ணன்
- முதுநிலை கணக்காளர்
சு. சசிகலா
- பிழை திருத்துபவர்
எஸ். எஸ். ரவிச்சந்திரன்
- கணினி வடிவமைப்பு
கோ. குருபிரசாத்

தொடர்பு கொள்ள வேண்டிய முகவரி :
ஆசிரியர், ‘முற்றம்’
தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு நிறுவனம்
அன்னை தெரசா மகளிர் வளாகம்,
வள்ளுவர் கோட்டம் நெடுஞ்சாலை,
நுங்கம்பாக்கம், சென்னை – 600 034.
தொலைபேசி : 044 – 4211 9497
044 – 2817 3412 / 3413
தொலை நகல் : 044 – 2817 3409

முற்றம் இதழ் தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு நிறுவனத்தின் ஆதரவுடன் வெளியிடப்படுகிறது.

ஆசிரியரிடமிருந்து...

குழந்தைகளைக் கொண்டாடுவோம்...!

அன்புள்ள வாசகர்களுக்கு,

அனைவரும் மகிழ்ச்சியாக தீபாவளி திருவிழாவைக் கொண்டாடி இருப்பீர்கள். நமது உச்ச நீதிமன்றத்தின் தீர்ப்பை மதித்து அனைவரும் மிக குறைந்த அளவில் பட்டாசுகளை வெடித்து தீபாவளியைக் கொண்டாடியதன் மூலம் உங்களுக்குள்ள சமூகப் பொறுப்பை நிரூபித்துள்ளீர்கள் என்பது பாராட்டுக்குரியது.

இதுபோன்று இனிவரும் காலங்களில் எந்த விழாவாக இருந்தாலும் அல்லது குடும்ப நிகழ்ச்சிகளாய் இருந்தாலும் பட்டாசுகள் கொளுத்துவதையும், வாணவேடிக்கைகள் நடத்துவதையும் படிப்படியாக குறைப்பதற்குக் கற்றுக் கொள்ள வேண்டும்.

பறவைகள் சரணாலயம் உள்ள பல கிராமங்களில், மக்கள் அங்கு வரும் பறவைகளுக்கு இடையூறு இன்றி பட்டாசுகள் வெடிப்பதை தவிர்த்து, விழாக்களைக் கொண்டாடி வருகின்றனர் என்பது உளமாற போற்றுதலுக்குரிய செயலாகும். சுற்றுப்புற சூழலைப் பாதுகாப்பதற்கும் இதுபோன்ற நடவடிக்கைகள் மிகவும் உதவுகிறது.

ஒவ்வொரு ஆண்டும் நவம்பர் மாதம் குழந்தைகள் தினத்தை அனுசரித்து வருகின்றோம். சிறு பிள்ளைகளுக்கு நல்ல பழக்க வழக்கங்களை பயிற்சியாக அளிக்க வேண்டும். யானை தன் குட்டிகளைத் தூக்கி தூக்கி அடித்து பயிற்சியளிப்பதன் மூலம் அதன் குட்டிகளின் பலத்தை அதிகரிக்கும்.

நாம் நமது குழந்தைகளையும் சற்று கண்டிப்புடனும், கட்டுப்பாட்டுடனும் வளர்க்கத் தவறக் கூடாது. அதோடு சரியான ஊட்டச் சத்துள்ள உணவுகளைக் கொடுப்பது, கழிப்பறையை பயன்படுத்தக் கற்றுக் கொடுப்பது, வீட்டு வேலைகளில் பெற்றோர்களுக்கு உதவி செய்ய பழக்குவது, கல்விக் கற்க ஊக்குவிப்பது, அவர்களின் திறமைகளை வளர்க்க முயற்சிகளை மேற்கொள்வது போன்ற நற்செயல்களை செய்ய பெற்றோர்களும், ஆசிரியர்களும் பொறுப்பேற்க வேண்டும்.

ஆண் மற்றும் பெண் குழந்தைகளை வளர்ப்பதிலும், பயிற்றுவிப்பதிலும், வாய்ப்புகளை கொடுப்பதிலும் எவ்வித பாகுபாடும் காட்டக்கூடாது. குழந்தைத் தொழிலாளர்கள், சிறுவயது திருமணம் ஆகியவைகள் கட்டாயமாக விரட்டியடிக்கப்பட வேண்டிய செயல்களாகும்.

பருவ மழை காலங்களில் குழந்தைகள் மீது சிறப்பு கவனம் செலுத்தி, பல்வேறு நோய்களிடமிருந்து பாதுகாக்க வேண்டியது நமது கடமையாகும். உங்கள் குழந்தை களுக்கு முற்றம் நமது வாழ்த்துகளைத் தெரிவித்துக் கொள்கிறது. ■

இப்படிக்கு,

(எஸ். சின்னப்பன்)
பதிப்பாளர் மற்றும் ஆசிரியர், முற்றம்

தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதார இயக்கம்

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. எடப்பாடி கே. பழனிசாமி அவர்கள் கன்னியாகுமரி மாவட்டம், நாகர்கோயிலில் நடைபெற்ற பாரத ரத்னா புரட்சித் தலைவர் டாக்டர் எம்.ஜி.ஆர். அவர்களின் நூற்றாண்டு விழாவில், அரசு நலத்திட்ட உதவிகளை பயனாளிகளுக்கு வழங்கினார்கள். இந்த நிகழ்வின் போது மாண்புமிகு சட்டப் பேரவைத் தலைவர் திரு. ப. தனபால் அவர்கள், மாண்புமிகு துணை முதலமைச்சர் திரு. ஓ. பன்னீர்செல்வம் அவர்கள், மாண்புமிகு மக்களவைத் துணைத் தலைவர் டாக்டர் மு. தம்பித்துரை அவர்கள், மாண்புமிகு மத்திய நிதி மற்றும் கப்பல் போக்குவரத்துத் துறை இணை அமைச்சர் திரு. பொன். இராதாகிருஷ்ணன் அவர்கள், மாண்புமிகு அமைச்சர் பெருமக்கள், புதுடெல்லிக்கான தமிழ்நாடு அரசின் சிறப்புப் பிரதிநிதி திரு. என். தளவாய் சுந்தரம் அவர்கள், நாடாளுமன்ற, சட்டமன்ற உறுப்பினர்கள், கன்னியாகுமரி மாவட்ட ஆட்சித் தலைவர் திரு. பிரசாந்த் மு. வடநேரே, இ.ஆ.ப., அவர்கள் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் உடனிருந்தனர். ▪

மகளிர் சுய உதவிக் குழுக்களுக்கு கடனுதவி

தமிழக அரசு சார்பில் கடந்த 30.09.2018 அன்று சென்னை, நந்தனத்தில் உள்ள ஒய்.எம்.சி.ஏ. மைதானத்தில் முன்னாள் முதலமைச்சர் பாரத ரத்னா புரட்சித் தலைவர் டாக்டர் எம்.ஜி.ஆர். அவர்களின் நூற்றாண்டு நிறைவு விழா வெகுவிமரிசையாகக் கொண்டாடப்பட்டது.

இவ்விழாவில் அரசின் சார்பில் பயனாளிகளுக்கு பல்வேறு நலத் திட்ட உதவிள் வழங்கப்பட்டன.



தொடர்ந்து தேசிய நகர்ப்புற வாழ்வாதார இயக்கத்தின் சென்னை மாநகர இயக்க மேலாண்மை அலகின் கீழ் செயல்படும் சாஸ்திரி நகர் பகுதி அளவிலான கூட்டமைப் பிற்கு சுழல் நிதியாக ரூ. 50,000/-த்திற்கான காசோலையை மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்கள் வழங்கினார். மேலும் 2196 சுய உதவிக் குழுக்கள், 7 பகுதி அளவி லான கூட்டமைப்புகளுக்கு சுழல் நிதியும், 550 சுய உதவிக் குழுக்களுக்கு ரூ. 4.67 கோடி வங்கிக் கடன் இணைப்பும் வழங்கப்பட்டது. இவ்விழாவில் மாண்புமிகு அமைச்சர் பெருமக்கள், நாடாளுமன்ற, சட்டமன்ற உறுப்பினர்கள், அரசு உயர் அலுவலர்கள், சென்னை மாவட்ட ஊரக வாழ்வாதார இயக்கத்தின் திட்ட இயக்குநர் திருமதி. சு. சினேகலதா அவர்கள், உதவித் திட்ட அலுவலர்கள், சுய உதவிக் குழுக்கள், பகுதி அளவிலான கூட்டமைப்புகள் ஆகியவற்றின் உறுப்பினர்கள் உட்பட பலர் கலந்து கொண்டனர். ▪

தீன்தயாள் உபாத்தியாய கிராமின் கௌசல்யா யோஜனா (DDU-GKY) திட்டத்தின் கீழ் கருத்தரங்கு

தீன் தயாள் உபாத்தியாய கிராமின் கௌசல்யா யோஜனா (DDU-GKY) திட்டத்தின் கீழ் திருப்பூர் ஏற்றுமதியாளர்கள் சங்கத்துடன் இணைந்து ஆயத்த ஆடை தயாரிப்பு நிறுவனங்களின் முதன்மை பொறுப்பாளர்களுக்கான கருத்தரங்கும், மகளிர் சுய உதவிக் குழுக்களுக்கு சுழல் நிதி மற்றும் வங்கிக் கடன் வழங்கும் விழாவும் 06.10.2018 அன்று திருப்பூர் IKF (Indian Knitting Fair) வளாகத்தில் நடைபெற்றது.

திருப்பூர் ஏற்றுமதியாளர்கள் சங்கத்தில் ஆயிரத்திற்கும் மேற்பட்ட உறுப்பு நிறுவனங்கள் உள்ளன. இந்நிறுவனங்களுக்குத் தேவையான பணியாளர்கள் (DDU-GKY) திட்டத்தின் கீழ் திறன் வளர்ப்பு பயிற்சி பெற்ற இளைஞர்களைப் பணியில் அமர்த்துவது குறித்து விவாதிப்பது இக்கருத்தரங்கின் நோக்கமாகும்.

சுமார் 250க்கும் மேற்பட்ட திருப்பூர் ஏற்றுமதியாளர்கள் சங்கத்தின் பிரதிநிதிகளும், சுமார் 2200 மகளிர் சுய உதவிக் குழு உறுப்பினர்களும் பங்கேற்ற இந்நிகழ்ச்சியில், தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதார இயக்கத்தின் முதன்மை செயல் அலுவலர் திரு. பிரவீன் பி. நாயர், இ.ஆ.ப., அவர்களுக்கும், திருப்பூர் ஏற்றுமதியாளர்கள் சங்கத்தின் தலைவர் திரு. ராஜா எம். சண்முகம் அவர்களுக்குமிடையே சிறப்புமிக்க புரிந்துணர்வு ஒப்பந்தம் கையெழுத்திடப்பட்டது. தேசிய அளவில் தமிழகத்தில் தான் முதன்முறையாக இத்தகையப் புரிந்துணர்வு ஒப்பந்தம் DDU-GKY திட்டத்தின் கீழ் ஏற்படுத்தியது சிறப்பானதாகும்.

திருப்பூர் மாவட்ட மாநில ஊரக வாழ்வாதார திட்டத்தின் சார்பில் 500 மகளிர் சுய உதவிக் குழுக்களுக்கு வங்கிக் கடனும், நகர்ப்புற வாழ்வாதார இயக்கத்தின் சார்பில் 100 மகளிர் சுய உதவிக் குழுக்களுக்கு ஆதார நிதி என சுமார் 6 கோடி மதிப்பிலான நலத்திட்ட உதவிகள் வழங்கப்பட்டன.

இந்நிகழ்ச்சிக்கு மாண்புமிகு தமிழக சட்டமன்ற தலைவர் திரு. ப. தனபால் அவர்கள் தலைமை தாங்கினார். மாண்புமிகு நகராட்சி நிர்வாகம், ஊரக வளர்ச்சி மற்றும் சிறப்புத் திட்டங்கள் செயலாக்கத்துறை அமைச்சர் திரு. எஸ். பி. வேலுமணி அவர்கள் தலைமையேற்று சிறப்புரையாற்றினார். மாண்புமிகு கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் திரு. உடுமலை கே. ராதாகிருஷ்ணன் அவர்கள் மகளிர் சுய உதவிக் குழுக்களுக்கு வங்கிக் கடனுதவிகளை வழங்கி சிறப்பித்தார்கள்.

பிற்பகல் நடைபெற்ற முதன்மை அலுவலர்களுக்கான கருத்தரங்கில் DDU-GKY திட்டம், ஆயத்த ஆடை தயாரிப்பு நிறுவனங்களில் மனித வளத் தேவைகள் ஆகிய தலைப்புகளில் கருத்தரங்கு நடைபெற்றது. விழா நடைபெற்ற வளாகத்தில் தீன்தயாள் உபாத்தியாய கிராமின் கௌசல்யா யோஜனா (DDU-GKY) திட்டம் குறித்த விளக்க அரங்கு அமைக்கப்பட்டிருந்தது. ■

அமுதகவி உமறுப்புலவர் பிறந்த நாள் விழா

தூத்துக்குடி மாவட்டம், எட்டையபுரம் பேரூராட்சியில் அமுதகவி உமறுப்புலவர் பிறந்த நாள் விழாவை முன்னிட்டு, 23.10.2018 அன்று எட்டையபுரத்தில் அமைந்துள்ள உமறுப்புலவர் அவர்களின் மணி மண்டபத்தில் நடைபெற்ற விழாவில் மாண்புமிகு செய்தி மற்றும் விளம்பரத் துறை அமைச்சர் திரு. கடம்பூர் ராஜு அவர்கள் கலந்து கொண்டு மகளிர் திட்டம் சார்பாக 91 பயனாளிகளுக்கு மானிய விலையில் அம்மா இருசக்கர வாகனங்களை வழங்கினார்.

தூத்துக்குடி மாவட்ட ஆட்சியர் திரு. ம. சந்தீப் நந்தூரி, இ.ஆ.ப., அவர்கள் தலைமையில் நடைபெற்ற இந்த விழாவில் தூத்துக்குடி மாவட்ட ஊரக வளர்ச்சி முகமைத் திட்ட இயக்குநர் திரு. ச. சா. தனபதி அவர்கள், மாவட்ட ஊரக வாழ்வாதார இயக்கத்தின் திட்ட இயக்குநர் திருமதி. பி. ஜே. ரேவதி அவர்கள், மகளிர் திட்ட உதவித் திட்ட அலுவலர்கள் திரு. ஞா. ரிச்சர்டு வில்சன், திரு. அருண், திரு. ஜே. பி. பிரசாத் மற்றும் பல்வேறு துறை அரசு அலுவலர்கள், மகளிர் சுய உதவிக் குழுக்கள், கிராம வறுமை ஒழிப்புச் சங்கம், ஊராட்சி அளவிலான கூட்டமைப்புகளின் உறுப்பினர்கள், பொது மக்கள் கலந்து கொண்டனர். ▪

பிளாஸ்டிக் ஒழிப்பு விழிப்புணர்வு கோலப் போட்டி

தூத்துக்குடி மாவட்ட தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதார இயக்கத்தின் சார்பாக பிளாஸ்டிக் ஒழிப்பு தொடர்பான விழிப்புணர்வு கோலப்போட்டி 15.10.2018 அன்று தூத்துக்குடி மாவட்ட ஆட்சியர் அலுவலக வளாகத்தில் நடைபெற்றது.

தூத்துக்குடி மாவட்ட ஆட்சியர் திரு. ம. சந்தீப் நந்தூரி, இ.ஆ.ப., அவர்கள், மாவட்ட ஊரக வளர்ச்சி முகமைத் திட்ட இயக்குநர் திரு. ச. சா. தனபதி அவர்கள், மாவட்ட ஊரக வாழ்வாதார இயக்கத்தின் திட்ட இயக்குநர் திருமதி. பி. ஜே. ரேவதி அவர்கள், ஒருங்கிணைந்த குழந்தைகள் வளர்ச்சிப் பணிகள் மாவட்ட திட்ட அலுவலர் திருமதி. எஸ். முத்துலட்சுமி அவர்கள், மாவட்ட ஆட்சியரின் நேர்முக உதவியாளர் (சிறு சேமிப்பு) திருமதி. மு. பீபீஜான் அவர்கள், உதவித் திட்ட அலுவலர்கள் உட்பட பலர் இந்நிகழ்ச்சியில் கலந்து கொண்டனர்.

தூத்துக்குடி மாவட்டத்தின் பல்வேறு பகுதிகளைச் சேர்ந்த மகளிர் சுய உதவிக் குழுக்கள், ஊராட்சி அளவிலான கூட்டமைப்புகளின் உறுப்பினர்கள் என சுமார் 160 நபர்கள் இந்த கோலப் போட்டியில் கலந்து கொண்டு, பிளாஸ்டிக் பயன்படுத்துவதால் ஏற்படும் பாதிப்புகள் மற்றும் இயற்கை வளங்களை பாதுகாக்க வேண்டியதன் முக்கியத்துவம் உள்ளடக்கிய கருத்துக்களை கோலங்களாக வரைந்து தங்களின் உணர்வுகளை வெளிப்படுத்தினர்.

போட்டியில் வெற்றி பெற்று முதல், இரண்டாம் மற்றும் மூன்றாம் பரிசுகளைப் பெற்ற வைகுண்டம் வட்டார அளவிலான கூட்டமைப்பு, புதூர் வட்டார அளவிலான கூட்டமைப்பு மற்றும் தூத்துக்குடி வட்டார அளவிலான கூட்டமைப்பு ஆகியவற்றிற்கு தூத்துக்குடி மாவட்ட ஆட்சியர் அவர்கள் பரிசுகளை வழங்கினார். ▪

சமூக உள்ளாக்கம் மற்றும் சமூக மேம்பாடு குறித்த தேசிய அளவிலான கருத்துப்பட்டறை மற்றும் அனுபவக் களப்பயணம்

கென்யா நாட்டின் உயர் அதிகாரிகள் வருகை

தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதார இயக்கம் சார்பில் வேலூர் மாவட்டத்தில் 09.01.2018 மற்றும் 10.10.2018 ஆகிய நாட்களில் சமூக உள்ளாக்கம் மற்றும் சமூக மேம்பாடு குறித்த தேசிய அளவிலான கருத்துப் பட்டறை மற்றும் அனுபவ களப் பயணம் மேற்கொள்ளப்பட்டது.

09.10.2018 அன்றைய நிகழ்வில் வாலாஜா மற்றும் அணைக்கட்டு ஒன்றியங்களில் உள்ள கிராம அமைப்புகளான சுய உதவிக் குழுக்கள், வறுமை ஒழிப்புச் சங்கம், ஊராட்சி அளவிலான குழு கூட்டமைப்பு, ஒத்தத் தொழில் குழு ஆகியவற்றின் செயல்பாடுகள் மற்றும் வாழ்வாதார நடவடிக்கைகளும், 10.10.2018 அன்று வேலூர் ஒன்றியத்தில் செயல்படும் ஒத்தத் தொழில் குழு பார்வையிடப்பட்டது.

இதனைத் தொடர்ந்து வேலூர் மாவட்டத்தின் தனிச்சிறப்பான 'வெல்மா' தயாரிப்புகளின் கண்காட்சி மற்றும் வெல்மா குறித்து விளக்கிக் கூறப்பட்டது. இந்நிகழ்வில் பல்வேறு மாநிலத்தைச் சார்ந்த அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

இதனைத் தொடர்ந்து 11.10.2018 அன்று கென்யா நாட்டின் துணை நிலை ஆளுநர்கள் மற்றும் உயர் அலுவலர்கள் கொண்ட குழுவினர் வேலூர் மாவட்டத்திற்கு வருகை தந்து, வேலூர் மாவட்டத்தில் தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதார இயக்கத்தின் வழிகாட்டுதலுடன் காவேரிப்பாக்கம், அணைக்கட்டு ஒன்றியங்களில் செயல்படும் கிராம அமைப்புகளான சுய உதவிக் குழுக்கள், கிராம வறுமை ஒழிப்புச் சங்கம், ஊராட்சி அளவிலான குழு கூட்டமைப்பு, ஒத்தத் தொழில் குழு ஆகியவற்றின் செயல்பாடுகள் மற்றும் வாழ்வாதார நடவடிக்கைகள் பார்வையிடப்பட்டது.

இந்த நிகழ்வுகளில் குறிப்பாக திருநங்கைகள் சுய உதவிக் குழு, முதியோர் சுய உதவிக் குழு, மாற்றுத் திறனாளிகள் சுய உதவிக் குழு ஆகியவை செயல்படுத்தும் Health Mix Unit, Jute Bag Unit, Masala Product Unit, Napkin Unit, கால்நடைத் தீவன மையம் ஆகியவை பார்வையிடப்பட்டது.

வேலூர் மாவட்ட தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதார இயக்கத்தின் திட்ட இயக்குநர் திரு. ஆ. ரா. சிவராமன் அவர்கள் தலைமையில் நடைபெற்ற இந்த நிகழ்வுகளில், உதவித் திட்ட அலுவலர்கள், திட்டப் பணியாளர்கள், ஊராட்சி அளவிலான கூட்டமைப்புகள், சுய உதவிக் குழுக்கள் ஆகியவற்றின் உறுப்பினர்கள் கலந்து கொண்டனர். ▪

பொருட்கள் உற்பத்தி செய்யும் சுய உதவிக் குழுக்களுக்கான கருத்தரங்கு

தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதார இயக்கத்தின் வாழ்வாதார மேம்பாட்டின் சந்தைப்படுத்துதல் பிரிவின் மூலமாக சென்னையில் இந்திய (IIP, சென்னை) பொட்டலமிடும் நிறுவனத்துடன் இணைந்து மகளிர் சுய உதவிக் குழுவில் பொருட்களை உற்பத்தி செய்யும் உறுப்பினர்களுக்கான கருத்தரங்கு 29.10.2018 அன்று அன்னை தெரசா மகளிர் வளாகத்தில் நடைபெற்றது.

இக்கருத்தரங்கினை மாநில ஊரக வாழ்வாதார இயக்கத்தின் நிர்வாக இயக்குநர் முனைவர் ஜே. யு. சந்திரகலா, இ.ஆ.ப., அவர்கள் துவக்கி வைத்தார்.

அனைத்து மாவட்ட மகளிர் குழு உற்பத்தியாளர்கள் இக்கருத்தரங்கில் கலந்து கொண்டு, அவர்கள் தயாரிக்கும் பொருட்களின் மாதிரிகளைக் காட்சிப்படுத்தினர்.

சென்னை IIP நிறுவனத்தினர், எந்த மாதிரியான பொட்டலங்கள் ஏற்புடையதாகவும், சந்தை வாய்ப்புகளை அதிகரிக்கும் என்றும் ஆலோசனைகளை வழங்கினர்.

இக்கூட்டத்தில் மாநில சந்தைப்படுத்துதல் மேலாளர் திரு. கோபி, மாநில சந்தைப்படுத்துதல் ஆலோசகர் திரு. சி. செவத்தான் உட்பட பலர் கலந்து கொண்டனர்.

நிவாரண நடவடிக்கைகள் குறித்த ஆய்வுக் கூட்டம்

இந்திய வானிலை ஆய்வு மையம் அறிவித்துள்ள கன மழை மற்றும் பருவ மழையை முன்னிட்டு, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை, ஊரக வளர்ச்சி, பெருநகர சென்னை மாநகராட்சி, சென்னை குடிநீர் வாரியம் மற்றும் பேரூராட்சிகள் ஆகிய துறைகளின் சார்பில் மேற்கொள்ள வேண்டிய முன்னெச்சரிக்கை மற்றும் நிவாரண நடவடிக்கைகள் குறித்த ஆய்வுக் கூட்டம் மாண்புமிகு நகராட்சி நிர்வாகம், ஊரக வளர்ச்சி மற்றும் சிறப்புத் திட்டங்கள் செயலாக்கத் துறை அமைச்சர் திரு. எஸ். பி. வேலுமணி அவர்கள் தலைமையில், 05.10.2018 அன்று தலைமைச் செயலகத்தில் நடைபெற்றது.

இக்கூட்டத்தில், சென்னைப் பெருநகர குடிநீர் வழங்கல் மற்றும் கழிவு நீர் அகற்று வாரிய கூடுதல் தலைமைச் செயலாளர் / மேலாண்மை இயக்குநர் திரு. அசோக் டோங்ரே, இ.ஆ.ப., அவர்கள், நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை முதன்மைச் செயலாளர் திரு. ஹர்மந்தர் சிங், இ.ஆ.ப., அவர்கள், ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை இயக்குநர் திரு. கா. பாஸ்கரன், இ.ஆ.ப., அவர்கள், சென்னை மாநகராட்சி ஆணையாளர் (பொ) திருமதி. ஆர். லலிதா, இ.ஆ.ப., அவர்கள், துணை ஆணையாளர் (பணிகள்) திரு. எம். கோவிந்த ராவ், இ.ஆ.ப., அவர்கள், தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரிய மேலாண்மை இயக்குநர் டாக்டர் சி. என். மகேஸ்வரன், இ.ஆ.ப., அவர்கள், சென்னை குடிநீர் வாரிய செயல் இயக்குநர் திரு. டி. பிரபு சங்கர், இ.ஆ.ப., அவர்கள், தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதார இயக்கத்தின் முதன்மை செயல் அலுவலர் திரு. பிரவீன் பி. நாயர், இ.ஆ.ப., அவர்கள் மற்றும் பல்வேறு துறை அரசு அலுவலர்கள் உட்பட பலர் கலந்து கொண்டனர். ■

சுய தொழில் திட்டத்தின் கீழ் கடன் வழங்குதல்

தேசிய நகர்ப்புற வாழ்வாதார இயக்கம், சென்னை மாவட்ட திட்ட செயலாக்க அலகின் மூலம் சென்னை பெருநகர மாநகராட்சிப் பகுதியில் வறுமைக் கோட்டிற்கு கீழ் உள்ள குடும்பங்களின் தனிநபர் தொழில் செய்யும் நபர்களுக்கு (SEP-I) சுய தொழில் திட்டத்தின் கீழ் சென்னை பெருநகர மாநகராட்சி மண்டலம் 1–ஐ சேர்ந்த திரு. பாலாஜி, த/பெ. சங்கர் என்பவருக்கு Piaggio பயணிகள் ஆட்டோ வாங்க இண்டஸ் இந்த் வங்கி மூலம் ரூ. 1,77,600/–ம், மண்டலம் 2–ஐ சேர்ந்த திருமதி. சம்பூர்ணம், க/பெ. சண்முகம் என்பவருக்கு இந்தியன் வங்கி மூலம் ரூ. 2,19,000/–யும் சென்னை பெருநகராட்சி வட்டார துணை ஆணையர் (வ) திருமதி. ச. திவ்யதர்ஷினி, இ.ஆ.ப., அவர்கள் மற்றும் சென்னை மாவட்ட ஊரக வாழ்வாதார இயக்கத்தின் திட்ட இயக்குநர் திருமதி. சு. சினேகலதா ஆகியோர் வழங்கினர்.

இந்நிகழ்வில் உதவித் திட்ட அலுவலர் திரு. பா. அருள்ஜோதி மற்றும் சமுதாய அமைப்பாளர், சுய உதவிக் குழுக்கள், பகுதி அளவிலான கூட்டமைப்பு ஆகியவற்றின் உறுப்பினர்கள் உட்பட பலர் கலந்து கொண்டனர். ■

கலை நிகழ்ச்சிகள் ஒத்தத் தொழில் குழு

தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதார இயக்கத்தின் வழிகாட்டுதலின் கீழ் திருச்சிராப்பள்ளி மாவட்டம், மருங்காபுரி ஊராட்சி ஒன்றியம், கண்ணூத்து குக்கிராமத்தில் ஒரே தொழில் செய்யும் 21 பெண்கள் ஒன்று சேர்ந்து கலை நிகழ்ச்சிகள் ஒத்தத் தொழில் குழு அமைத்துள்ளனர். இது குறித்து அவர்கள் கூறும்போது, 'நாங்கள் மாத சேமிப்பாக ரூ. 50/– வசூல் செய்து வருகிறோம். வசூல் செய்த தொகையை வரவு செலவு செய்வதற்காக துவரங்குறிச்சி வங்கியில் சேமிப்பு கணக்கு துவக்கியுள்ளோம்.

நாங்கள் நாடகம், ட்ரம் செட், தப்பாட்டம் மற்றும் பல்வேறு கருவிகளைக் கொண்டு கலை நிகழ்ச்சிகளை சிறந்த முறையில் நடத்தி வருகிறோம். இதன் மூலம் எங்களுக்கு நிரந்தரமாக தொழிலும், நிலையான வருவாயும் கிடைத்து வருகிறது.

மகளிர் திட்டத்தின் மூலம் ஊக்க நிதியாக பெற்ற ரூ. 1,00,000/–த்தை தொழிலை மேம்படுத்திக் கொள்ள தேவைப்படும் கலைப்பொருட்கள், உடை, ட்ரம் செட் போன்றவை வாங்கவும், உள்கடன் கொடுக்கவும் பயன்படுத்திக் கொண்டோம். எங்களின் வாழ்வாதாரத்திற்கு உதவிய தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதார இயக்கத்திற்கு நன்றி" என்று மகிழ்ச்சியுடன் கூறுகின்றனர். ■

வாழ்வாதாரத் திட்டத்தினால் கிடைத்த வளம்

திருச்சிராப்பள்ளி மாவட்டம், மருங்காபுரி ஊராட்சி ஒன்றியம், வேம்பனூர் குக்கிராமத்தில் வசித்து வரும் அங்குலட்சுமி, க/பெ. மருதுபாண்டியன். மிகவும் ஏழைக் குடும்பத்தைச் சேர்ந்தவர். இவருக்கு இரண்டு குழந்தைகள் உள்ளனர். அந்தக் குழந்தைகளைப் படிக்க வைக்க மிகவும் சிரமப்பட்டு வந்தார். ஏழைக் குடும்பத்தைச் சேர்ந்த அங்குலட்சுமிக்கு தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதார இயக்கத்தின் வழிகாட்டுதலுடன் செயல்படும் வேம்பனூர் கிராம வறுமை ஒழிப்புச் சங்கம் மூலம் விவசாயம் சாரா தொழிற்கடனாக ரூ. 15,000/– வழங்கப்பட்டது.

அந்தத் தொகையைக் கொண்டு பெட்டிக் கடை ஒன்றினை ஆரம்பித்த அங்குலட்சுமி, அந்தக் கடை அருகிலேயே பணியாரம் மற்றும் பலகாரங்கள் சுட்டு விற்பனை செய்ய ஆரம்பித்தார். தற்போது தினசரி கணிசமான அளவில் வருவாய் பெற்று வரும் அங்குலட்சுமி தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதார இயக்கத்திற்கும், கிராம வறுமை ஒழிப்புச் சங்கத்திற்கும் நன்றி தெரிவித்துக் கொண்டார். ■

மாற்றுத் திறனாளியின் வெற்றிக் கதை

திருச்சிராப்பள்ளி மாவட்டம், மருங்காபுரி ஊராட்சி ஒன்றியம், எம். இடையப்பட்டி குக்கிராமத்தைச் சேர்ந்தவர் நல்லுச்சாமி, த/பெ. பழனிச்சாமி. ஒரு கால் மற்றும் ஒரு கை ஊனமுற்ற இவர் 5ஆம் வகுப்பு வரை படித்துள்ளார். இவருக்கு தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதார இயக்கத்தின் வழிகாட்டுதலுடன் செயல்படும் எம். இடையப்பட்டி கிராம வறுமை ஒழிப்புச் சங்கத்தின் மூலம் மாற்றுத்திறனாளி மற்றும் நலிவுற்றோருக்கு வழங்கும் தனிநபர் வட்டியில்லாத கடன் ரூ. 10,000/– பெற்று, புண்ணாக்கு மற்றும் தவிட்டுக் கடை வைத்து, அதன் மூலம் வருவாய் பெற்று வருகிறார்.

தன்னுடைய தேவைகளுக்காக பிறரின் உதவியை நாடி கஷ்டப்பட்டுக் கொண்டிருந்த தனக்கு, கடன் வழங்கி தொழில் வாய்ப்பு ஏற்படுத்திக் கொடுத்த தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதார இயக்கத் திற்கும், கிராம வறுமை ஒழிப்புச் சங்கத்திற்கும் தன்னுடைய நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறார் நல்லுச்சாமி. ■

பொருட்களை வாங்க கடைகளுக்குச் செல்லும்போது துணிப்பைகளைக் கொண்டு செல்லுங்கள். பிளாஸ்டிக் பைகள் பயன்படுத்துவதை தவிர்த்திடுங்கள். தேவையற்ற நேரங்களில் கணிப்பொறி, மின் விளக்கு, மின் விசிறி போன்றவற்றை பயன்படுத்துவதை தவிர்த்திடுங்கள். தண்ணீரை சிக்கனமாகப் பயன்படுத்துங்கள். கழிவு நீர் தேங்காதவாறு அப்புறப்படுத்துங்கள். நீர்ப்போக்கு கால்வாய்களில் குப்பைகளை போடாதீர்கள். குப்பைகளை மக்கும் குப்பை, மக்காத குப்பை என தரம் பிரித்து அதற்குரிய கூடைகளில் போடுங்கள்.

வளம் தந்த கறவை மாடு வளர்ப்பு

தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதார இயக்கத்தால் வளம் பெற்ற பயனாளி தனது வெற்றிக் கதையை கூறுகிறார்.

“என் பெயர் மாலினி, எனது கணவர் பெயர் மணிமாறன். நான் திருவாரூர் மாவட்டம், மன்னார்குடி வட்டம், ராமாபுரம் ஊராட்சியில் வசித்து வருகிறேன். நான் மிகவும் ஏழைக் குடும்பத்தைச் சேர்ந்தவள். எனக்கு 45 வயதாகிறது. நான் எட்டாம் வகுப்பு வரை மட்டுமே படித்துள்ளேன். மேலே படிக்க முடிய வில்லை. எனக்கு பிறவியிலிருந்தே ஒரு கால் ஊனம். எனக்கு திருமணம் நடந்து ஒரு ஆண் மற்றும் ஒரு பெண் குழந்தை உள்ளன. எனது குடும்பம் மிகவும் கஷ்டமான நிலையில் இருந்தது.

இந்த நிலையில் எங்கள் பகுதியில் உள்ள மகளிர் குழுவினைப் பார்வையிட வந்த ஒருவரைப் பற்றி நான் விசாரித்தேன். அவர் தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதார இயக்கத்தில் பணி புரிகிறார் என்றும், அவரின் பெயர் சரிதா என்றும், களப்பகுதி ஒருங்கிணைப்பாளர் என்றும் தெரிந்து கொண்டேன். மேலும் ஊரக வாழ்வாதார இயக்கம் மூலம் மகளிர் சுய உதவிக் குழு ஆரம்பித்து, குறைந்த வட்டியில் வங்கியில் கடன் பெற்றுத் தருகிறார்கள் என்பதையும் தெரிந்து கொண்டேன்.

நான் அவரை நேரில் சந்தித்து, என்னுடைய குடும்ப சூழ்நிலை பற்றிக் கூறினேன். அவர் ஊரக வாழ்வாதார இயக்கத்தின் வாயிலாக தனிநபர் கடன் தருவதாகவும், அதனை வைத்து கறவை மாடு வாங்கி பால் வியாபாரம் செய்து வாழ்க்கையினை உயர்த்திக் கொள்ளலாம் என்றும் கூறினார்.

நானும் வறுமைக் கோட்டிற்குக் கீழ் உள்ளதாலும், நலிவுற்றோராக இருந்த தினாலும், அதிகாரிகளும் எனக்குக் கடன் வழங்க சம்மதித்தனர். தற்பொழுது நான் கடன் பெற்று கறவை மாடு வாங்கி பால் கறந்து பால் சொசைட்டி யில் கொடுத்து போதுமான வருமானம் பெற்று வருகிறேன்.

தற்போது கடன் இல்லாமல் மேலும் ஒரு கறவை மாடு வாங்கும் அளவிற்கு உயர்ந்துள்ளேன். என் வருமானத்தினால் குழந்தைகளை நல்ல முறையில் வளர்த்து வருகிறேன். எனக்கு இந்த வாய்ப்பினை வழங்கிய தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதார இயக்கத்திற்கு என் நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்”. ■

– மாலினி, ராமாபுரம் ஊராட்சி, திருவாரூர் மாவட்டம்.

மண்புழு உரம் தந்த வளம்

தருமபுரி மாவட்டம், அரூர் வட்டத்தில் உள்ள தீர்த்தமலை கிராமத்தில் செயல் பட்டு வரும் ஆவாரை மகளிர் சுய உதவிக் குழுவில் அப்பகுதியில் வசிக்கும் ஏழைக் குடும்பத்தைச் சேர்ந்த 14 பெண்கள் உறுப்பினர்களாக உள்ளனர். இக்குழு தீர்த்தமலை ஊராட்சி அளவிலான கூட்டமைப்பில் இணைந்து செயல் பட்டு வருகிறது.

இக்குழுவின் உறுப்பினர்கள் சிறப்பாக செயல்பட்டு வருகின்றனர். இக்குழுவிற்கு பொருளாதாரக் கடனாக ரூ. 2,00,000/– வழங்கப்பட்டது. இதில் மானியம் ரூ. 60,000/– ஆகும். இக்குழுவின் உறுப்பினர்கள் இந்தத் தொகையை மூலதனமாகக் கொண்டு மண்புழு உரம் தயாரிப்பில் ஈடுபட்டு வருகின்றனர்.

மண்புழு உரம் தயாரிப்பிற்கான மூலப் பொருளான மண்புழுவினை மதுரையில் இருந்த வாங்குகின்றனர். தயாரிக்கப்படும் உரங்களை தங்கள் பகுதியில் உள்ள கடைகள், சந்தைகள் போன்றவற்றில் விற்பனை செய்கின்றனர். வெளியூர்களில் இருந்து வரும் வியாபாரிகளுக்கும் விற்பனை செய்கின்றனர்.

மேலும் இக்குழுவின் உறுப்பினர்கள் மாநில மற்றும் மாவட்ட அளவில் நடைபெறும் விற்பனைக் கண்காட்சிகளில் கலந்து கொண்டும் தாங்கள் தயாரிக்கும் மண்புழு உரத்தினை விற்பனை செய்கின்றனர். மண்புழு உரம் தயாரிப்பின் மூலம் குழுவின் உறுப்பினர்கள் ஒவ்வொருவரும் மாதந்தோறும் கணிசமான வருவாய் பெற்று வருகின்றனர். குழுவின் சார்பில் பெற்றக் கடனையும் முறையாகத் திரும்பச் செலுத்தி வருகின்றனர்.

தங்களின் வாழ்வாதார வளர்ச்சிக்கு உதவிய தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதார இயக்கத்திற்கு தங்களின் நன்றியினைத் தெரிவித்துக் கொள்கின்றனர் ஆவாரை மகளிர் சுய உதவிக் குழுவின் உறுப்பினர்கள். ■

பாசிப்பருப்பு நெய் உருண்டை

சத்துமிக்க பாசிப்பருப்பு உருண்டை குழந்தைகளுக்கு மிகவும் விருப்பமானதாகும். சுவையான பாசிப்பருப்பு உருண்டை செய்வது எப்படி என்பதை பார்ப்போம்

தேவையான பொருட்கள்

பாசிப் பருப்பு – 2 கப், சர்க்கரை – 2 கப், நெய் – 200 கிராம், ஏலக்காய் – 6, உடைத்த முந்திரி – 50 கிராம்.

செய்முறை

ஏலக்காயை லேசாக நெய்யில் வறுத்து தோலோடு சேர்த்து மிக்சியில் பொடி செய்து கொள்ளவும். முந்திரிப் பருப்பை சிறித நெய்யில் வறுத்து வைத்துக் கொள்ளவும். பாசிப் பருப்பை வாணலியில் போட்டு வாசனை வரும் வரை வறுத்து ஆற வைத்து, மிக்சியில் அரைக்கவும்.

அரைத்த மாவை சலித்து எடுத்து நைசான மாவை லட்டுக்கு வைத்துக் கொள்ளவும். மிக்சியில் சர்க்கரையை போட்டு அரைத்து அதையும் மாவில் கலக்கவும்.

ஒரு தட்டில் அரைத்த மாவு, சர்க்கரை, ஏலக்காய் தூள், வறுத்த முந்திரி என அனைத்தையும் போட்டு நன்றாகக் கலந்து வைக்கவும், வாணலியில் 200 கிராம் நெய்யை ஊற்றி உருக்கவும்.

நெய் கருகாமல் சூடான உடன் அதை மாவின் மேல் ஊற்றவும். பின்னர் மாவுடன் நெய்யை கலந்து வெதுவெதுப்பான சூட்டிலேயே கையால் லட்டு போல் பிடித்து, அதை தட்டில் இட்டு ஆற வைக்கவும்.

ஆறியதும் டப்பாவில் போட்டு மூடி வைத்து சாப்பிடும்போது எடுத்துக் கொள்ளவும். 10 நாட்கள் வரை கெடாமல் இருக்கும் இந்த பாசிப்பருப்பு உருண்டை சத்து மிகுந்தது. அனைவரும் இதை விரும்பி சாப்பிடுவார்கள். ■

திருமதி. சசிகலா ராஜமன்னார்,
மேற்கு மாம்பலம், சென்னை.

உடலுக்கு நன்மை தரும் தானியங்கள்

நாம் உண்ணும் உணவில் என்ன சத்துக்கள் உள்ளன என்பது தெரியாமல் உடல் நலத்திற்கு ஒவ்வாத உணவுகளை நாம் சாப்பிடுகிறோம். நம் உடல் நலத்தைக் காக்கும் இயற்கை உணவுகள் குறித்து காணலாம்.

சோளம் – சோளத்தில் உடலுக்கு அவசியமான புரதம், இரும்பு, கால்சியம் போன்ற சத்துக்கள் அடங்கி உள்ளன. சோள உணவுகள் வயிற்றுப் புண்ணை ஆற்றும். சோள உணவுகளை மூல நோயாளிகள் சாப்பிடக் கூடாது.

கம்பு – கம்பு உணவுகள் பாலூட்டும் தாய்மார்களுக்கு ஏற்றது. அரிசியை விட பல மடங்கு சத்து மிகுந்த கம்பு உணவு, ஜீரண சக்தியை அதிகரிக்கும். உடல் பருமனைக் குறைக்கும்.

சாமை – சாமை உணவுகள் அனைத்து வயதினருக்கும் ஏற்றது. வயிறு சம்பந்தமான நோய்களைக் கட்டுப்படுத்தும். மலச்சிக்கலைப் போக்கும். நீரிழிவு நோயாளிகள் கூட சாமை உணவுகளை சாப்பிடலாம்.

வரகு – வரகில் புரதம், இரும்பு மற்றும் சுண்ணாம்புச் சத்து போன்றவை உள்ளன. இதனை அரிசிக்கு மாற்றாகப் பயன்படுத்தி, இட்லி, தோசை, ஆப்பம், பொங்கல் என்று வகை வகையாக செய்து சாப்பிடலாம். மாதவிடாய் கோளாறு உடைய பெண்கள் வரகைச் சமைத்துச் சாப்பிடுவது நல்லது.

கேழ்வரகு – தானியங்களில் அதிக சத்து மிகுந்த கேழ்வரகை, ராகி என்றும் சொல்வார்கள். இது உடல் உஷ்ணத்தை சமநிலையில் வைத்திருக்கும். குடலுக்கு வலிமை அளிக்கும். நீரிழிவு நோயாளிகள் கூட கேழ்வரகால் செய்த பண்டங்களைச் சாப்பிடலாம்.

பார்லி – குழந்தைகள் முதல் முதியவர்கள் வரை சாப்பிடத் தகுந்தது பார்லி. இதைக் கஞ்சியாக காய்ச்சி நோயாளிகளும் சாப்பிடலாம். உடலில் உள்ள தேவையற்ற நீரை வெளியேற்றி எடையைக் குறைக்கும். மலச்சிக்கல் உள்ளவர்கள் பார்லியை சாப்பிட்டால் குணமாகும். காய்ச்சலை தடுக்கும். குடல் புண்ணை ஆற்றும். இருமலைத் தணிக்கும். ■

தொகுப்பு - திருமதி. காந்திமதி சம்பு, எம்.ஏ., பி.எட்.,
மேட்டுத் தெரு, உடையாப்பட்டி,
சேலம் மாவட்டம்.

முழு சுகாதார தமிழகம் முன்னோடி தமிழகம்

தூய்மை இந்தியா இயக்கம் (ஊரகம்)

தெற்கு பிராந்திய மாநிலங்களுக்கான ஆய்வுக் கூட்டம்

திறந்தவெளி மலம் கழித்தலற்ற நிலையின் தரம் மற்றும் நீடித்தத் தன்மை குறித்து தெற்கு பிராந்திய மாநிலங்களுக்கு ஆய்வு கூட்டம் 30.10.2018 அன்று சென்னையில் நடைபெற்றது. கோவா, கர்நாடகா, ஆந்திர பிரதேசம், தமிழ்நாடு மற்றும் கேரளா ஆகிய மாநிலங்களும், புதுச்சேரி, தாத்ரா மற்றும் நாகர் ஹவேலி மற்றும் டாமன் டையூ ஆகிய யூனியன் பிரதேசங்களும் இந்த ஆய்வுக் கூட்டத்தில் பங்கெடுத்தன. திருவண்ணாமலை, சேலம், திருவள்ளூர் மற்றும் காஞ்சிபுரம் மாவட்டங்களில் இருந்து மாவட்ட ஆட்சியர்கள் இதில் பங்கெடுத்துக் கொண்டனர்.

மத்திய குடிநீர் வழங்கல் மற்றும் சுகாதார அமைச்சகத்தின் செயலாளர் திரு. பரமேஸ்வரன் ஐயர் அவர்கள் தலைமையில் இந்த ஆய்வுக் கூட்டம் நடைபெற்றது. தூய்மை இந்தியா இயக்கம் (ஊரகம்) மூலம் இந்தியாவில் ஏற்படுத்தப்பட்ட மாற்றங்கள், திறந்தவெளி மலம் கழித்தலற்ற நிலையைத் தக்க வைத்தல் மற்றும் அதில் உள்ள சவால்கள் ஆகியவை குறித்து பல கருத்துக்களை திரு. பரமேஸ்வரன் ஐயர் அவர்கள் பகிர்ந்து கொண்டார்.

அதனைத் தொடர்ந்து இந்த ஆய்வுக் கூட்டத்தில் பங்கேற்ற மாநிலங்கள் தூய்மை பாரத இயக்கம் (ஊரகம்) குறித்து தங்கள் மாநிலங்களில் ஏற்பட்டுள்ள முன்னேற்றம் குறித்து பேசினர்.

தமிழ்நாடு சார்பாக பள்ளிகள், அங்கன்வாடிகள், தனிநபர் இல்லங்கள் போன்றவற்றில் பயன்படுத்தப்பட்டு வரும் கழிப்பறை பயன்பாட்டு அட்டை காஞ்சிபுரம் மாவட்டத்தில் சிறப்பாக செயல்பட்டு வருவதாகவும், இந்த கழிப்பறை பயன்பாட்டு அட்டையானது மக்களிடையே கழிப்பறை உபயோகத்தை ஊக்குவிக்கும் வண்ணம் இருப்பதாக ஆய்வு கூட்டத்தில் பேசிய காஞ்சிபுரம் மாவட்ட ஆட்சியர் அவர்கள் தெரிவித்தார்.

ஒருங்கிணைந்த மகளிர் சுகாதார வளாகங்கள் பயன்பாட்டை ஊக்குவித்து வரும் திருவண்ணாமலை மாவட்டம் மற்றும் இலக்கு மக்களிடையே சுகாதாரம் குறித்த மாற்றத்தை ஏற்படுத்தி வரும் சேலம் மாவட்டம் என மாவட்டங்களில் நிகழ்ந்து வரும் முக்கிய முன்னேற்றங்கள் குறித்து மாவட்ட ஆட்சியர்கள் பகிர்ந்து கொண்டனர்.

சுகாதாரம் குறித்த மனமாற்றத்தில் முக்கிய பங்கெடுத்து வரும் ஆசிரியர்கள், ஊக்குநர்கள், அங்கன்வாடி பணியாளர்கள், கிராம செவிலியர்கள் ஆகியோர் இந்த ஆய்வுக் கூட்டத்தில் கலந்து கொண்டு, அவர்களின் களப்பணிகள் குறித்து பகிர்ந்து கொண்டனர்.

ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சிகள் துறையின் கூடுதல் தலைமைச் செயலாளர் திரு. ஹன்ஸ்ராஜ் வர்மா, இ.ஆ.ப., அவர்கள், திருமதி. பிங்கி ஜோவெல், இ.ஆ.ப., அவர்கள், திரு. கே. பாஸ்கரன், இ.ஆ.ப., அவர்கள் மற்றும் கூடுதல் இயக்குநர்கள் இந்தக் கலந்தாய்வில் கலந்து கொண்டனர். ■

சுகாதார ஊக்குநர்களுக்கு மண்டல அளவிலான புத்தாக்கப் பயிற்சி 29.10.2018 – 31.10.2018

ஊரகப் பகுதிகளில் சிறப்பாகப் பணியாற்றி வரும் சுகாதாரக் களப்பணி ஊக்குநர்களுக்கு சுகாதார களப்பணியில் திறன் பாட்டை அதிகரிக்க மூன்று நாள் பயிற்சி 29.10.2018 முதல் 31.10.2018 வரை திண்டுக்கல் மாவட்டத்தில் உள்ள காந்தி கிராம் பல்கலைக் கழகத்தில் நடைபெற்றது.

திண்டுக்கல், கரூர், புதுக்கோட்டை, திருச்சிராப்பள்ளி மற்றும் மதுரை மாவட்டங்களிலிருந்து ஒவ்வொரு மாவட்டத்தில் இருந்தும் 10 முதல் 14 வரை சுகாதார ஊக்குநர்கள் இந்தப் பயிற்சியில் கலந்து கொண்டு பயன் பெற்றனர்.

தூய்மை பாரத இந்தியா (இயக்கம்) மாவட்ட ஒருங்கிணைப் பாளர்களும் இந்தப் பயிற்சியில் கலந்து கொண்டனர். ODF-ன் நிலைத்த மற்றும் நீடித்தத் தன்மையை உறுதி செய்வது மற்றும் அதற்கான உத்திகள் குறித்து சுகாதார ஊக்குநர்கள் பயிற்றுவிக்கப்பட்டனர்.

கீழ்காணும் தலைப்புகளில் சுகாதார ஊக்குநர்கள் பயிற்றுவிக்கப்பட்டனர்.

1. கிராமங்களில் இன்றைய ODF நிலையைக் கண்டறிவது.
2. சுகாதாரம் குறித்த பழக்க வழக்கங்களை மக்களிடையே மேற்பார்வை செய்தல்.
3. சுகாதாரம் குறித்து ஊரகப் பகுதி மக்களின் மன மாற்றம் மற்றும் அதன் தற்போதைய நிலைகள் ஆய்வு
4. ODF நிலைத்த மற்றும் நீடித்தத் தன்மையை உறுதிப்படுத்துவது.
1. கிராமங்களில் வரைபடங்கள் மூலம் ODF நிலையை சரிபார்த்தல்

ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி இயக்குநரகம் மற்றும் யுனிசெப் நிறுவனம் இணைந்து நடத்திய இந்தப் பயிற்சியானது மிகவும் பயனுள்ளதாக இருந்தது. இந்தப் பயிற்சியில் களப்பணி மூலமாகவும், செயல்முறை விளக்கம் மூலமாகவும் ஊக்குநர்கள் பயிற்றுவிக்கப்பட்டனர்.

சுகாதார அணுகுமுறையில் முன்னிலைப் பயிற்று நிறுவனமாக விளங்கும் ஃபிட்பேக் பவுண்டேசன் நிறுவனத்தில் இருந்து திரு. பிரேந்திரா மற்றும் அவர் குழுவினர் முதன்மை பயிற்றுநர்களாக ஊக்குநர்களுக்குப் பயிற்சி அளித்தனர்.

திண்டுக்கல் மாவட்ட ஆட்சியர் திரு. T. G. வினய், இ.ஆ.ப., அவர்கள் சிறப்பு விருந்தினராக இந்தப் பயிற்சியின் துவக்க விழாவில் பங்கேற்று உத்வேகம் அளித்தார். திண்டுக்கல் மாவட்ட ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி முகமையின் திட்ட இயக்குநர் திருமதி. கே. கவிதா, காந்திகிராம் அறக் கட்டளையின் சார்பாக திரு. கே. சிவக்குமார் மற்றும் ஜி. பங்கஜம் ஆகியோர் இந்தப் பயிற்சியில் கலந்து கொண்டு பங்கேற்பாளர்களுக்கு உத்வேகம் அளித்தனர். பயிற்சியின் இறுதியில் பங்கேற்பாளர்கள் அனைவருக்கும் பங்கேற்பு சான்றிதழ் வழங்கப்பட்டது. ■

களப்பணியின் குரல்கள்

தருமபுரி மாவட்டம், மொரப்பூர் ஒன்றியம், புட்டிரெட்டிப்பட்டி ஊராட்சியில் திறந்தவெளி மலம் கழிப்பதினால் ஏற்படும் பாதிப்புகள் மற்றும் நோய்கள் பற்றி விளக்கப்பட்டது. பின்னர் கழிப்பறையின் முக்கியத்துவம் மற்றும் அதன் பயன்பாடு ஆகியவற்றைப் பற்றி கிராம வரைபடம் மூலம் விழிப்புணர்வு ஏற்படுத்தப்பட்டது. நாள் : 01.09.2018

இந்தியன் ஆயில் எண்ணெய் நிறுவனத்தின் உதவியுடன் திருச்சிராப்பள்ளி மாவட்டம், திருவொற்றியூர் ஒன்றியத்தில் உள்ள வாழவந்தான் கோட்டை ஊராட்சியில் அங்கன்வாடி கழிப்பறை கட்டப்பட்டு, 01.09.2018 அன்று திறந்து வைக்கப்பட்டது.

நீலகிரி மாவட்டம், கோத்தகிரி வட்டம், ஜக்கனாரை ஊராட்சியில் கிராம சபைக் கூட்டம் 03.09.2018 அன்று நடைபெற்றது. அக்கூட்டத்தில் கழிப்பறையின் முக்கியத்துவம், அதன் அவசியம் பற்றி பேசப்பட்டது.

களப்பணியின் குரல்கள்

திருவண்ணாமலை மாவட்டத்தில் உள்ள ஊக்குவிப்பாளர்களுக்கு திருவண்ணாமலை வட்டாரத்தில் ஊக்குவிப்புப் பயிற்சி அளிக்கப்பட்டது. இதில் கழிப்பறையின் முக்கியத்துவம் குறித்து பேசப்பட்டு, பயிற்சியில் பங்கெடுத்த அனைவரும் ODF உறுதிமொழி எடுத்தக் கொண்டனர்.

திருவண்ணாமலை மாவட்டம், கலசப்பாக்கம் ஊராட்சி ஒன்றிய பள்ளி குழந்தைகளுக்கு திறந்தவெளியில் மலம் கழிப்பதினால் ஏற்படும் பாதிப்புகள் பற்றி விளக்கப்பட்டது. பின்னர் மக்களை ஒருங்கிணைத்து திறந்தவெளியில் மலம் கழித்தலற்ற நிலையினை தக்க வைத்திட விழிப்புணர்வு அளிக்கப்பட்டது. உறிஞ்சிக்குழி முறையில் கழிவறை அமைத்து பயன்படுத்துவதினால் ஏற்படும் நன்மைகள் பற்றி மக்களுக்கு விளக்கப்பட்டது. நாள் : 05.09.2018

திருப்பூர் மாவட்டம், ஊத்துக்குளி ஒன்றியம், அணைப்பாளையம் ஊராட்சியில் உள்ள கிராம மக்களுக்கு திறந்தவெளி மலம் கழிப்பதால் ஏற்படும் பாதிப்புகள் மற்றும் அதனால் ஏற்படும் நோய்கள் பற்றி விளக்கப்பட்டு, கழிப்பறையை பயன்படுத்த சமூக வரைபடம் மூலம் விழிப்புணர்வு ஏற்படுத்தப்பட்டது. மேலும், சுகாதார செய்தியினை வெளிப்படுத்தும் சுகாதார சுவர் விளம்பரங்கள் வரையப்பட்டன. நாள் : 05.09.2018

(தொடர்ச்சி 20ஆம் பக்கம்)

விஜயதசமியன்று புதிதாய் பள்ளியில் சேர்த்திருந்தான் குமார்.
அரசு மேல்நிலைப் பள்ளி பூஞ்சோலை
வெளிச்சம்
புது நண்பர்கள் கிடைத்தார்கள்.
அப்பாவின் வேலை மாற்றம் காரணமாக நகரத்திலிருந்து இடம் பெயர்ந்து வந்த குமாருக்கு பூஞ்சோலை கிராமத்தின் இனிய சூழல் மிகவும் பிடித்துப் போயிற்று.
ஒரே குறை என்னவென்றால், இது இன்னும் முழுமையான திறந்தவெளி கழிப்பிடமற்ற கிராமமாக மாறவில்லை என்பதே.
ஊர் எல்லையில் இருக்கும் சாலையோர அவலங்களே அதற்கு சாட்சி.
அன்புடன் வரவேற்கிறது! பூஞ்சோலை சிற்றூர்
நண்பர்கள் துணையோடு அதற்கொரு முடிவு கட்ட எண்ணினான் குமார்.
பிறந்தது பூஞ்சோலை நண்பர்கள் குழு.
அரசு மேல்நிலைப் பள்ளி
ஒவ்வொரு வகுப்பிலும் ஆர்வமுள்ள மூன்று உறுப்பினர்களைக் கொண்ட குழு இருக்கும்.
கழிப்பறை பயன்படுத்தாத மாணவர்களிடம் விழிப்புணர்வை ஏற்படுத்துவதே அவர்களின் வேலை
மணி, உண்மையிலேயே நீ என்னோட பெஸ்ட் ஃப்ரண்டா இருந்தா, உங்க வீட்டுல கழிப்பறை இருக்கணும்.
எனக்குப் புரியுது. எங்க அப்பாவுக்குப் புரியணுமே.
அப்ப வர்ற ஞாயிற்றுக்கிழமை இவங்க அப்பாகிட்டயே பேசிடுவோம்.
அதேபோல், விடுமுறை நாட்களில் நண்பர்களின் வீடுகளுக்குச் சென்று, அவர்களின் பெற்றோரிடம் பேசினார்கள்.
நோயற்ற வாழ்வுக்கு கழிப்பறைப் பயன்பாட்டின் அவசியத்தை விளக்கினார்கள்.
...என்னப்பா, ஏதேதோ சொல்லிப் பயமுறுத்தறீங்க!

ஆமா ஐயா, ஆரோக்கியமா இருந்தால்தானே நல்லாப் படிச்சி நல்ல மதிப்பெண் வாங்க முடியும்.
அது சரி... இருந்தாலும் நமக்கு அவ்வளவு விவரம் கிடையாதேப்பா...
கவலைப்படாதீங்க! நாங்க சொல்றோம்.
இந்த விஷயத்தில், கழிப்பறை கட்ட முன்வரும் பெற்றோருக்கு வேண்டிய ஆலோசனைகள் மற்றும் அரசுத் திட்டங்களைக் கூறி வழிகாட்டவும் முன் வந்தார் குமாரின் அப்பா.
நான் சொல்றபடி செய்ங்க. நேரா பஞ்சாயத்து ஆபீஸ் போங்க...
ரொம்ப நன்றி சார். நான் இன்றைக்கே போய்ப் பார்க்கிறேன்.
அதன் பிறகு, மாணவ தீபங்களின் ஒளியால் கிராமம் வெளிச்சம் பெற்றது.
உதயமாயிற்று சுகாதார விடியல்.
நண்பா... இப்ப என்னோட நண்பர்கள் எல்லோரும் கழிப்பறை பயன்படுத்த ஆரம்பிச்சிட்டாங்க.
ஆமா குமார், என் நண்பர்கள் வீட்டிலும் கழிப்பறை வசதி வந்துடிச்சி.
வாவ்... அருமை
அதைக் கேள்விப்பட்ட தலைமையாசிரியர், குமாரை அழைத்துப் பாராட்டினார். குழுவுக்கு ஆலோசனைகளும் கூறினார்.
குழுவினரின் உழைப்போடும், கிராம மக்களின் ஒத்துழைப்போடும் அடுத்த ஆறு மாதத்தில், பூஞ்சோலை கிராமம், சுத்தம், சுகாதாரத்தில் ஆனந்தத் தேன் சிந்தும் பூஞ்சோலையாய் மாறியது.
அன்புடன் வரவேற்கிறது!
திறந்த வெளி மலம் கழித்தலற்ற
பூஞ்சோலை
சிற்றூர்

(17ஆம் பக்கம் தொடர்ச்சி)

களப்பணியின் குரல்கள்

மதுரை மாவட்டம், மதுரை கிழக்கு வட்டாரம், வெரசூர் ஊராட்சியில் உள்ள பள்ளி மாணவர்களுக்குத் தனிநபர் இல்லக் கழிப்பறை பற்றிய விழிப்புணர்வு அளிக்கப்பட்டது. அத்துடன் திறந்தவெளியில் மலம் கழிப்பதினால் ஏற்படும் தீமைகள் குறித்து மாணவர்களுக்கு கூறப்பட்டது. நாள் : 07.09.2018

காஞ்சிபுரம் மாவட்டம், திருப்போரூர் வட்டாரம், நெல்லுக்குப்பம் ஊராட்சியில் உள்ள அரசு பள்ளியில் உள்ள மாணவர்களுக்குத் தனிநபர் இல்லக் கழிப்பறை பற்றிய விழிப்புணர்வு அளிக்கப்பட்டது. நாள் : 07.09.2018

பெரம்பலூர் மாவட்ட ஆட்சியர் 10.09.2018 அன்று தூய்மையே சேவை 2018 இயக்க முன் ஏற்பாடுகள் குறித்து அனைத்துத் துறை அலுவலர்களுடன் ஆலோசனைக் கூட்டம் நடத்தினார்.

களப்பணியின் குரல்கள்

திருச்சி மாவட்டம், புள்ளம்பாடி ஊராட்சி ஒன்றியத்தில் உள்ள அங்கன்வாடி பணியாளர்களுக்கு குழந்தைகளை சுகாதாரமாக வைத்திடவும், குழந்தை பருவத்திலேயே சுகாதார விழிப்புணர்வு கொண்டு வரும் வகையில் தன் சுத்தம் குறித்து குழந்தைகளுக்கு விளக்கப்பட்டது. நாள் : 12.09.2018

தருமபுரி மாவட்டம், பென்னகரம் ஒன்றியம், ஒன்னப்பகவுண்டர் அள்ளி ஊராட்சியில் உள்ள மக்களுக்கு கிராம வரைபடம் மூலம் தனிநபர் இல்லக் கழிப்பறையின் முக்கியத்துவம் குறித்து விழிப்புணர்வு ஏற்படுத்தப்பட்டது. நாள் : 14.09.2018

திருவண்ணாமலை மாவட்டம், கலசப்பாக்கம் ஒன்றியம், பத்தியவாடி ஊராட்சியில் உள்ள பள்ளி மாணவர்களுக்கு திறந்தவெளியில் மலம் கழித்தல்அற்ற நிலையை தக்க வைக்க விழிப்புணர்வு ஏற்படுத்தப்பட்டது. உறிஞ்சுக்குழி கழிப்பறையின் முக்கியத்துவம் குறித்தும் விழிப்புணர்வு வழங்கப்பட்டது. நாள்: 05.10.2018

களப்பணியின் குரல்கள்

திண்டுக்கல் மாவட்டம், ரெட்டியார் சத்திரம் வட்டாரம், G. நடுப்பட்டி ஊராட்சியில் உள்ள பள்ளி மற்றும் அங்கன்வாடியில் பயிலும் குழந்தைகளுக்கு கிராம வரைபடம் மூலம் சுகாதாரம் மற்றும் தன் சுத்தம் குறித்த விழிப்புணர்வும் ஏற்படுத்தப்பட்டது. நாள் : 03.10.2018

தருமபுரி மாவட்டம், மொரப்பூர் ஒன்றியம், கெலவள்ளி ஊராட்சியில் கழிப்பறையின் பயன்பாடு, திறந்தவெளியில் மலம் கழிப்பதினால் ஏற்படும் பாதிப்புகள் குறித்து பேசப்பட்டது. பின்னர் அப்பாதிப்புகளை இரட்டைஉறிஞ்சுக்குழி கழிப்பறை மூலம் எவ்வாறு கட்டுப்படுத்தலாம் என்று விழிப்புணர்வு வழங்கப்பட்டது. நாள் : 11.10.2018

நீலகிரி மாவட்டம், கோத்தகிரி வட்டத்தில் உள்ள பள்ளியில் மக்கள் வழிகாட்டி இயக்கம் நடத்திய கூட்டத்தில் பள்ளி மாணவ மாணவியர்களுக்கு சுகாதாரம் மற்றும் தன் சுத்தம் குறித்து பேசப்பட்டது. மேலும் கழிப்பறையின் முக்கியத்துவம் மற்றும் அதன் அவசியம் பற்றியும் மாணவர்களுக்கு எடுத்துரைக்கப்பட்டது. நாள்: 09.10.2018

திருச்சிராப்பள்ளி மாவட்டம், புள்ளம்பாடி ஊராட்சி ஒன்றியம், கல்லகம் ஊராட்சியின் அங்கன்வாடி மையத்தில் உள்ள குழந்தைகளுக்கு உலக கை கழுவும் தினத்தில் கைகளை கழுவும் வழிமுறைகள் குறித்து பயிற்சி வழங்கப்பட்டது. நாள் : 15.10.2018.

திண்டுக்கல் மாவட்டம், ஒட்டஞ்சத்திரம் வட்டாரம், ரெட்டியபட்டி ஊராட்சியில் உள்ள கிராம மக்களுக்கு சமூக வரைபடம் மூலம் உறிஞ்சுக்குழி கழிப்பறை பற்றிய விழிப்புணர்வு வழங்கப்பட்டது. மேலும், கிராம மக்கள் “முழு சுகாதார தமிழகம் – முன்னோடி தமிழகம்’’ உறுதிமொழி எடுத்துக் கொண்டனர்.

களப்பணியின் குரல்கள்

திருச்சிராப்பள்ளி மாவட்டம், புள்ளம்பாடி வட்டாரம், கல்லகம் பஞ்சாயத்தில் உள்ள பள்ளி மாணவர்களுக்கு உலக கை கழுவும் தினத்தில் கைகளை கழுவும் விதிமுறைகள் எடுத்துரைக்கப்பட்டன. பின்னர் அனைத்து மாணவர்களும் இனிவரும் நாட்களில் தங்கள் குடும்பத்தினர்களுக்கும் ஊர்மக்கள்அனைவரும் சோப்பு போட்டு கை கழுவும் பழக்கத்தினைஉறுதி செய்ய விழிப்புணர்வு ஏற்படுத்துவோம் என்று உறுதி மேற்கொண்டனர். நாள்: 15.10.2018.

உலக கை கழுவும் தினத்தன்று பள்ளி மாணவர்கள் மற்றும் பெற்றோர்களுக்கு சோப்பினால் கை கழுவும் தன்மைகள் குறித்து விழிப்புணர்வு ஏற்படுத்தப்பட்டது, அதனை தொடர்ந்து செயல்முறை விளக்கமும் வழங்கப்பட்டது.
இடம்: தருமபுரி, நாள்: 15.10.2018.

பள்ளி மாணவ மாணவியருக்கு உலக கை கழுவும் தினத்தன்று கைகள் மூலம் ஏற்படும் நோய்கள் குறித்து விளக்கப்பட்டது. பின்னர் சோப்பு போட்டு கைகளை கழுவுதல் மூலம் ஏற்படும் நன்மைகள் குறித்து விளக்கம் வழங்கப்பட்டது.
இடம்: பெருமாட்டு நல்லூர், காஞ்சிபுரம் மாவட்டம்,
நாள்: 15.10.2018

களப்பணியின் குரல்கள்

பெரம்பலூர் மாவட்டம், வேப்பூர் ஊராட்சி ஒன்றியத்தில் உள்ள பள்ளியில் பயிலும் மாணவர்களுக்கு உலக கை கழுவும் தினமான அக்டோபர் 15, 2018 அன்று தன் சுத்தம் மற்றும் சோப்பினால் கை கழுவுவதின் நன்மைகள் குறித்து விழிப்புணர்வு நிகழ்ச்சி நடத்தப்பட்டது.

காஞ்சிபுரம் மாவட்டம், அய்யங்கார் குளத்தில் உள்ள அரசு மேல்நிலைப்பள்ளியில் பயிலும் மாணவர்களுக்கு திட்ட இயக்குநர் தலைமையில் உலக கை கழுவும் தினம் கொண்டாடப்பட்டது. கைகளை கழுவும் பழக்கத்தின் முக்கியத்துவத்தையும் மற்றும் சோப்பினால் கைகளை கழுவும் முறைகள் குறித்து மாணவர்களுக்கு விளக்கப்பட்டது. நாள். 15.10.2018.

திருநெல்வேலி மாவட்டம், பாளையங்கோட்டை வட்டாரம், முனீர்பாலம் ஊராட்சியில் உள்ள அரசு உயர்நிலைப் பள்ளியில் பயிலும் மாணவர்களுக்கு மாவட்ட ஆட்சித் தலைவர் தலைமையில் உலக கை கழுவும் தினம் கொண்டாடப்பட்டது. சோப்பினால் கைகளை கழுவும் முறையினை மாணவர்களுக்கு விளக்கப்பட்டது. நாள். 15.10.2018.

பிளாஸ்டிக் பொருட்களினால் மனிதர்களுக்கு ஏற்படும் பாதிப்புகள்

பிளாஸ்டிக் பொருட்கள் எவ்வாறு மனிதர்களுக்கு தீங்கு விளைவிக்கின்றன?

மலட்டுத் தன்மை

1. ஆன்ட்ரோஜன் மற்றும் ஈஸ்ட்ரோஜன் ஹார்மோன்களைப் போன்ற வேதியியல் அமைப்புகளைக் கொண்ட வேதிப் பொருட்கள் (Harmone Mimicking Chemicals) நாளமில்லாச் சுரப்பிகளில் (Endocrine Glands) கடுமையான பாதிப்புகளை ஏற்படுத்துகின்றன.ஆண்களில் பெண்களுக்கான தன்மையும், பெண்களில் ஆண்களுக்காக தன்மையும் ஏற்படுகின்றன.
2. பெண்களின் கருப்பையின் செயல்பாடு, கருவின் திறன், மாதவிடாய் ஆகியவை பாதிக்கப்படுகின்றது.
3. ஆண் குழந்தைகளுக்குப் பிறப்புறுப்பில் குறைபாடுகள் உண்டாகின்றன.
4. பெண்களுக்குப் பருவம் அடையும் வயதில் மாற்றம் உண்டாகிறது.
5. ஆண், பெண் இருபாலருக்கும் மலட்டுத் தன்மை (Infertility) ஏற்படுகின்றது.
6. ஆண்களுக்கு விந்தின் அளவு பெருமளவு குறைந்து போகிறது.
7. ஆண்களிலும், பெண்களிலும் மலட்டுத் தன்மையை ஏற்படுத்துகிறது.





புற்றுநோய்

பிளாஸ்டிக் பொருட்கள் பயன்படுத்துவதால் பல்வேறு வகையான புற்றுநோய்கள் ஏற்படுகின்றன.

பிளாஸ்டிக் பொருட்களை எளிதாக ஜீரணிக்க முடியாத காரணத்தால் அவை வெகுநாட்கள் உணவுக் குழாயில் தங்கி, உடலில் புற்று நோய்களை ஏற்படுத்துகின்றன.

சுவாசக் கோளாறுகள்

ஆஸ்த்மா, நுரையீரல் தொற்று போன்ற சுவாசக் கோளாறுகள் ஏற்படுகின்றன.

இதர பாதிப்புகள்

கன உலோகங்களில் குழந்தைகளுக்கு நுண்ணறிவுக் குறைபாடு, கற்றலில் குறைபாடுகள், இரத்த சோகை, சிறுநீரகங்கள், கல்லீரல் பாதிப்பு போன்ற உடல் நலக் குறைபாடுகள் ஏற்படுகின்றன.



தொற்று நோய்

தேங்கி இருக்கும் பிளாஸ்டிக் கழிவுகளில் மழை நீர் தேங்கும் போது, கொசுக்கள் உற்பத்தியாகி, அதன் மூலம் டெங்கு, சிக்குன் குனியா போன்ற நோய்கள் பரவுகின்றன.

பிளாஸ்டிக் கழிவுகளால் சாக்கடைக் கால்வாய்களில் உள்ள நீரின் ஓட்டம் தடைபடுகின்றது. இதனால் கொசு உற்பத்தி ஏற்பட்டு யானைக்கால் நோய் ஏற்படுகின்றது.

பிளாஸ்டிக் பொருட்கள், பல ஆண்டுகள் ஆனாலும் மங்காத தன்மை உடையதால், அவற்றை அழிப்பதோ, ஒழிப்பதோ இயலாத காரியம். நீர், நிலம், காற்று மற்றும் உணவு போன்ற பல்வேறு வழிகளில் மாசு ஏற்பட்டு, மனித உயிருக்கும், சுகாதாரத்திற்கும் பிளாஸ்டிக் பொருட்கள் பெரும் தீங்கு விளைவிக்கக் காரணமாகி விடுகிறது. எனவே, இவற்றை அறவே தவிர்ப்பது இன்றைய சூழ்நிலையில் கட்டாயமாகிறது. ▪

கொசுக்களினால் பரவும் நோய்களில் இருந்து தப்பிக்க...

மழைக் காலம் ஆரம்பித்து விட்டாலே கொசுக்களினால் பரவும் நோய்கள் அதிகமாக இருக்கும். தற்போது கொசுக்களினால் பல்வேறு நோய்கள் பரவி வருவதால், மக்கள் மிகவும் சிரமத்திற்கு உள்ளாகி வருகின்றனர்.

நன்னீரில் வளரும் ஏடிஸ் வகை கொசுக்கள் கடிப்பதால் டெங்கு காய்ச்சல் வருகிறது. இந்த வகைக் கொசுக்கள் காலை மற்றும் மாலை வேளைகளில் கடிக்கும் தன்மை வாய்ந்தவை. எனவே காலை மற்றும் மாலை வேளைகளில் கொசுக்கடியில் இருந்து காக்கும் வழிகளை மேற்கொள்ளலாம்.

பொதுவாகநம்வீடுகளைச்சுற்றிலும்கழிவுநேர்தேங்காமல்பார்த்துக்கொண்டாலே கொசுக்களை பெருமளவு ஒழித்து விடலாம். மேலும் வீட்டின் உள்ளும், வீட்டைச் சுற்றிலும் உடைந்த பிளாஸ்டிக் பொருட்கள், டயர்கள், தொட்டிகள், தேங்காய் மட்டைகள் போன்றவற்றில் தேங்கி இருக்கும் மழை நீரில் கொசுக்கள் உருவாகும் என்பதால் அக்குப்பைகளை உடனுக்குடன் அப்புறப்படுத்த வேண்டும்.

வீட்டில் தண்ணீர் சேகரித்து வைக்கும் பாத்திரங்கள் மேல்நிலைத் தொட்டிகள் போன்றவற்றை நன்கு மூடி வைக்க வேண்டும். மேலும் அவற்றை வாரம் ஒருமுறை பீளிச்சிங் பவுடர் போட்டு நன்கு கழுவ வேண்டும். தண்ணீரை நன்கு கொதிக்க வைத்து, பின்னர் அதை ஆற வைத்து வடிகட்டி குடிக்கலாம்.

டெங்கு காய்ச்சலின் தாக்குதலுக்கு ஆளாகினால் உடன் மருத்துவரை கலந்து ஆலோசித்து உரிய மருத்துவ சிகிச்சையை மேற்கொள்வது அவசியம். சுய மருத்துவம் மேற்கொள்வதை தவிர்க்கவும்.

கொசுக்களால் பல்வேறு நோய்கள் பரவுவதால் கொசுக்கடியில் இருந்த தப்பிக்க கொசுவலை, கொசு விரட்டி போன்வற்றை பயன்படுத்துகிறோம். இரசாயன பொருட்கள் கலந்து கொசு விரட்டிகளால் உடலுக்கு பாதிப்பு ஏற்படுகிறது. எனவே உடலுக்கு பாதிப்பு ஏற்படுத்தாமல் இயற்கை முறையிலான கொசுவிரட்டிகளை எவ்வாறு பயன்படுத்துவது என்பதை பார்ப்போம்.

துளசி

துளசியின் பட்டை, இலைகள் போன்றவற்றை நன்கு காய வைத்து பொடி செய்து கொள்ளவும். நாட்டு மருந்து கடைகளிலும் துளசி பொடி கிடைக்கும். கம்ப்யூட்டர் சாம்பிராணி ஒன்றைப் பற்ற வைத்து அது சாம்பலானதும் அதன் மீது நன்கு காய்ந்த துளசிப் பொடியை போட்டால் அதன் புகைக்கு கொசு வராது.

யூகலிப்ட்ஸ் எண்ணெய்

யூகலிப்ட்ஸ் எண்ணெயை கை கால்களில் தடவிக் கொண்டால் கொசுக்கள் கடிக்காது. குழந்தைகளுக்கு இந்த எண்ணெயைத் தடவலாம்.

நொச்சி இலை

இந்த இலையை தண்ணீரில் 1 மணி நேரம் ஊற வைத்தால், இலையின் வாசனை தண்ணீரில் இறங்கி விடும். அந்தத் தண்ணீரைக் கொண்டு வீட்டைத் துடைத்து எடுத்தால் இந்த வாசனைக்கு கொசுக்கள் வராது.

கற்பூரம்

ஒரு கிண்ணத்தில் தண்ணீர் ஊற்றி அதில் கற்பூரங்களை போட்டு அறையின் மூலையில் வைத்தால், அதன் வாசனைக்கு கொசுக்கள் வராது.

கலப்பு எண்ணெய்

வேப்பெண்ணெய், இலுப்பை எண்ணெய், நல்லெண்ணெய் ஆகிய மூன்றையும் சம அளவு கலந்து, விளக்கேற்றினால் கொசுக்கள் வராது.

பேய்மிரட்டி இலை

பச்சையாகக் கிடைக்கும் பேய்மிரட்டி இலைகளை வீட்டின் நான்கு மூலைகளிலும் போட்டு வைத்தால் அதன் வாசனைக்கு கொசுக்கள் வராது. காய்ந்த பேய்மிரட்டி இலைகளை நாட்டு மருந்து கடைகளில் வாங்கி விளக்குத் திரியாகப் பயன்படுத்தினால் கொசுக்கள் ஓடிப்போகும்.

வேப்பிலை

கரித்துண்டுகளை பற்ற வைத்து, நெருப்பு வந்தவுடன் அதில் பச்சை வேப்பிலையைப் போட்டால் புகை வரும். இந்தப் புகையில் இருக்கும் கசப்பு வாசனை கொசுக்களை விரட்டிவிடும். வேப்பிலையின் வாசனை சிலருக்கு ஒப்புக் கொள்ளாமல் இருந்தால், அதற்கு பதிலாக நொச்சி, துளசி இலைகளைப் போட்டு புகை ஏற்படுத்தலாம்.

அந்து உருண்டை

பெரும்பாலும் கொசுக்கள் துணிகளில்தான் ஒளிந்து கொள்ளும், அதனால் துணிகளை வாசனை நிரம்பியதாக வைத்துக் கொள்ளவும். அந்து உருண்டைகளை துணிகளுக்கிடையே போட்டு வைக்கலாம். குழந்தைகளின் துணிகளை துவைக்கும்போது தண்ணீரில் டெட்டால் கலந்து அலசி காயப் போட்டால் அந்த வாசனைக்கு கொசுக்கள் வராது.

தொகுப்பு – திருமதி. ஜெயந்தி கண்ணன், எம்,ஏ., எம்.எட்.,
முதுகலைப் பட்டதாரி ஆசிரியை,
அரசினர் மேல்நிலைப்பள்ளி, திருவஞ்சேரி, காஞ்சிபுரம் மாவட்டம்.

சுனாமிக்குப் பிந்தைய நிலைத்த வாழ்வாதாரத் திட்டம்

IFAD
Enabling poor rural people to overcome poverty

சுனாமிக்குப் பிந்தைய நிலைத்த வாழ்வாதாரத் திட்டம்
திருமதி. மீனாட்சி ராஜகோபால், இ.ஆ.ப.,
கூடுதல் தலைமைச் செயலாளர் / திட்ட இயக்குநர்

திரு. ஏ. ஆர். கிளாட்ஸ்டன் புஷ்பராஜ்,
கூடுதல் இயக்குநர்
திரு. இரா. இரவிச்சந்திரன்,
தகவல் மற்றும் தொழில் நுட்ப மேலாளர்

சுனாமிக்கு பின் நிலைத்த வாழ்வாதாரத் திட்டத்தின் மூலம் பயன் பெறும் மக்களே...

வரும் காலங்களில் கடல் சீற்றம் மற்றும் இயற்கை பேரிடர்களின் பாதிப்புக்கள் அதிகம் ஏற்படும் என்பதால் அதிலிருந்து பாதுகாத்துக் கொள்ள துயர் குறைப்பு நிதி, காப்பீடு (கால்நடை, உடமைகள் மற்றும் தனிநபர் காப்பீடு), வருமானம் ஈட்டும் தொழிற்கடன் மற்றும் மீனவ மக்களின் வாழ்வாதாரத்தை மேம்படுத்த மீனவ முன்னேற்ற சங்கம், கடன் மீட்பு நிதி மற்றும் மீன் பிடி உபகரணங்களுக்கான காப்பீடு போன்ற திட்டங்களில் இணைந்து பயன்பெறுமாறு கேட்டுக் கொள்கிறேன்.

- மீனாட்சி ராஜகோபால், இ.ஆ.ப.,

காஞ்சிபுரம் மாவட்டத்தின் செயல்பாடுகள் குறித்த ஆய்வு

சுனாமிக்குப் பிந்தைய நிலைத்த வாழ்வாதாரத் திட்டத்தின் கூடுதல் தலைமைச் செயலாளர் / திட்ட இயக்குநர் திருமதி. மீனாட்சி ராஜகோபால், இ.ஆ.ப., அவர்கள் கடந்த 28.09.2018 அன்று காஞ்சிபுரம் மாவட்டத்தில் சுனாமிக்குப் பிந்தைய நிலைத்த வாழ்வாதாரத் திட்டத்தின் செயல்பாடுகளை பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டார்.

ஆய்வின் போது வடநெம்மேலி ஊராட்சி அளவிலான கூட்டமைப்பின் செயல்பாடுகள் மற்றும் MIS Tally மென் பொருளில் கூட்டமைப்பின் கணக்குகளை பராமரிப்பதை ஆய்வு செய்து, கூட்டமைப்பு மேலும் சிறப்பாக செயல்பட ஆலோசனைகளை வழங்கினார்.

அதனைத் தொடர்ந்து சதுரங்கப்பட்டினம் ஊராட்சியில் செயல்பட்டுவரும் கோகுலம் Ice Cream மற்றும் Ice கட்டிகள் தயாரிக்கும் கூட்டுப் பொறுப்புக் குழுவைப் பார்வையிட்டு ஆய்வு செய்தார்.

பின்பு மேயூர் கிராமத்தில் திட்டத்தின் வழிகாட்டுதலின் கீழ் அமைக்கப்பட்டு, செயல்படும் சாண எரிவாயு கலனை ஆய்வு செய்து, அதன் பயன்பாடு குறித்து பயனாளியிடம் கேட்டறிந்தார்.

மேலும் சதுரங்ககுப்பம் கிராமத்தில் உள்ள மீன் வியாபார சங்கத்தின் உறுப்பினர்களை சந்தித்து அவர்களின் தொழில் விபரங்களைக் கேட்டறிந்தார்.

ஆய்வின் நிறைவாக கோவளம் ஊராட்சியில் செயல்படும் சாய்பாபா அழகு நிலையத்தைப் பார்வை யிட்டு, அழகு நிலையத்தினை நடத்தி வரும் பெண்களிடம் அவர்களின் தொழில் வளர்ச்சிக்காக ஆலோசனைகளை வழங்கி, ஆய்வினை நிறைவு செய்தார். ■

சின்னம்மன் மீனவர் முன்னேற்ற சங்கம் – திருவள்ளூர் மாவட்டம்

திருவள்ளூர் மாவட்டம், சுனாமிக்குப் பிந்தைய நிலைத்த வாழ்வாதாரத் திட்டத்தின் கீழ் செயல்பட்டு வரும் பழவேற் காடு பகுதி வள மையத்திற்குட்பட்ட லைட்ஹவுஸ் குப்பம் ஊராட்சியின் கீழ் அமைந்துள்ள கூனன்குப்பம் கிராமத்தில் 47 மீனவர்கள் ஒன்றிணைந்து தங்கள் வாழ்வாதாரத்தில் முன்னேற்றமடைந்திட கடந்த 04.04.2017 அன்று கூனன் குப்பம் மீனவர் முன்னேற்ற சங்கத்தினை உருவாக்கி, மாவட்ட மீனவர் முன்னேற்ற சங்கங்களின் சம்மேளனத்தின் வழி முறையாகப் பதிவு செய்யப்பட்டுள்ளது.

கூட்டு ஒப்பந்தத்தின் வழிமுறைகளின்படி 2017-2018ஆம் நிதியாண்டில் பன்னாட்டு வேளாண் வளர்ச்சி நிதியுதவி யுடன் கூடிய சுனாமிக்குப் பிந்தைய நிலைத்த வாழ்வாதாரத் திட்டத்தின் வழிகாட்டுதலுடன் சின்னம்மன் மீனவர் முன்னேற்ற சங்கத்திற்கு அலுவலகக் கட்டிடம் ரூ. 8,27,000/- மதிப்பீட்டில் 17.06.2018ல் கட்டுமானப் பணி முழுவதுமாக முடிக்கப்பட்டு, சங்கத்திற்குத் தேவையான உபகரணங்கள் வழங்கப்பட்டுள்ளது.

சின்னம்மன் மீனவர் முன்னேற்ற சங்க அலுவலகக் கட்டிடம் 19.09.2018 அன்று கூடுதல் தலைமைச் செயலாளர் / திட்ட இயக்குநர் திருமதி. மீனாட்சி ராஜகோபால், இ.ஆ.ப., அவர்களால் திறந்து வைக்கப்பட்டது.

“சங்க உறுப்பினர்கள் ஒன்றிணைந்து தாங்கள் பிடிக்கும் மீன்களை நல்ல விலைக்கு விற்று இலாபம் ஈட்டுவது மட்டுமின்றி தங்கள் பகுதியினைச் சேர்ந்த மீனவ மக்களின் முன்னேற்றத்திற்காகவும் செயல்பட வேண்டும்” என கூடுதல் தலைமைச் செயலாளர் / திட்ட இயக்குநர் அவர்கள் சின்னம்மன் மீனவர் முன்னேற்ற சங்கத்தின் உறுப்பினர்களுக்கு அறிவுரை வழங்கினார். ■

டெய்லரிங் JLC – காஞ்சிபுரம்

காஞ்சிபுரம் மாவட்டம், கழிபட்டூர் கிராமத்தில் சுனாமிக்குப் பிந்தைய நிலைத்த வாழ்வாதாரத் திட்டத்தின் வழிகாட்டு தலின்படி செயல்படும் மார்டன் டெய்லரிங் JLC உறுப்பினர்கள் திருமதி. ஆதிலட்சுமி, திருமதி. சாந்தி, திருமதி. விஜயா, திருமதி. புஷ்பா, திருமதி. ஷீலா ஆகிய 5 நபர்களும் 03.02.2016ல் NABFINS-ல் ரூ.1,14,000/- கடன் பெற்று தையல் தொழிலை ஆரம்பித்தனர்.

தையல் மிஷின் மற்றும் துணிகளை இவர்கள் வாங்கி சிறந்த முறையில் தைத்து விற்பனை செய்து, மாதம் ஒன்றுக்கு ஒரு நபருக்கு ரூ. 10,000/- முதல் ரூ. 12,000/- வரை வருமானம் பெற்று வருகின்றனர்.

மேலும் தங்களுடைய பிள்ளைகளின் படிப்பு செலவு மற்றும் குடும்பச் செலவு போன்றவற்றிற்கு இந்த வருவாய் மிக பயனுள்ளதாக உள்ளது என்கின்றனர். அதுமட்டுமின்றி NABFINS-ல் வாங்கியக் கடன் தொகை முழுவதையும் அடைத்து விட்டனர். ■

எந்தக் கடனும் இல்லாமல் சொந்த காலில் நிற்பதற்கு காரணமாக இருந்த சுனாமிக்குப் பின் நிலைத்த வாழ்வாதாரத் திட்டத்திற்கு மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக் கொண்டனர்.

மகளிர் சுய உதவிக் குழுவின் மூலம் வருவாய் ஈட்டும் தொழில் – பழக்கடை வியாபாரம்

வருவாய் ஈட்டும் தொழில் கடன் திட்டத்தின் மூலம் வாழ்வாதாரம் பெற்ற லட்சுமி என்ற பயனாளி தன் அனுபவத்தைக் கூறுகையில்,

"என்னுடைய பெயர் லட்சுமி, நான் காஞ்சிபுரம் மாவட்டம், சதுரங்கப்பட்டினம் ஊராட்சியில் செயல்படும் தாமரை மகளிர் சுய உதவிக் குழுவில் உறுப்பினராக உள்ளேன். எங்களுடைய சுய உதவிக் குழு சதுரங்கப்பட்டினம் ஊராட்சி அளவிலான குழுக் கூட்டமைப்பில் இணைந்துள்ளது. கூட்டமைப்பில் வருவாய் ஈட்டும் தொழில் (IGA) செய்ய கடன் தொகை அளிப்பதாக குழுவில் தெரிவிக்கப்பட்டது.

நான் சிறிய அளவில் பழம் வாங்கி கூடையில் வைத்து தெருக்களில் வியாபாரம் செய்து வந்தேன். போதிய வருவாய் இல்லாமல் தொழிலை மேற்கொண்டு நடத்த இயலவில்லை. அப்பொழுது கூட்டமைப்பிற்கு சென்று கடன் பெற விண்ணப்பித்தேன். கடந்த 18.08.2018 அன்று வருவாய் ஈட்டும் தொழில் (IGA) மூலமாக கடன் பெற என்னுடைய பங்களிப்பாக ரூ. 1,000/- செலுத்தி, திட்ட நிதியாக ரூ. 9,000/- என மொத்தம் ரூ. 10,000/- கடனாகப் பெற்று, அத்தொகையைக் கொண்டு என்னுடைய தொழிலை விரிவுபடுத்தி, தற்பொழுது கூடையில் சுமந்து பழ வியாபாரம் செய்யாமல், கடை ஒன்று அமைத்து பழ வியாபாரம் செய்து வருகிறேன்.

எனது கடை அருகில் பேருந்து நிறுத்தம், அரசு ஆரம்ப சுகாதார மையம் மற்றும் காவல் நிலையம் போன்றவை இருப்பதால் வியாபாரம் நன்கு நடைபெறுகிறது. தற்போது நாள் ஒன்றுக்கு ரூ. 200/- முதல் ரூ. 400/- வரை இலாபம் கிடைக்கிறது. கிடைத்த வருவாயில் எனது கடன் தொகை முழுவதையும் திரும்பச் செலுத்தி விட்டேன்.

மிகவும் கஷ்டத்தில் வாழ்ந்த எனக்கு கடனுதவி அளித்து, வாழ்வாதாரத்தை உயர்த்த உதவி செய்த சுனாமிக்குப் பிந்தைய நிலைத்த வாழ்வாதாரத் திட்டத்திற்கு நன்றி தெரிவித்துக் கொள்கிறேன்" என்று குறிப்பிட்டார். ■

ஸ்ரீ கிருஷ்ணா வெட்டிவேர் சாகுபடி கூட்டுப் பொறுப்புக் குழு

கடலூர் மாவட்டம், தியாகவல்லி ஊராட்சியில் ஸ்ரீ கிருஷ்ணா வெட்டிவேர் சாகுபடி கூட்டுப் பொறுப்புக் குழு சிறப்பாக செயல்பட்டு வருகிறது. அதில் பிருந்தா, லோகநாயகி, தனலட்சுமி, பழனியம்மாள் மற்றும் தேவி ஆகிய ஐந்து நபர்கள் இணைந்து வெட்டிவேர் சாகுபடி செய்வதற்கு நாபின்ஸ் நிறுவனத்தின் மூலம் ரூ. 2,37,500/- கடனுதவி பெற்று, வெட்டிவேர் சாகுபடியை சிறப்பாக செய்து வருகின்றனர்.

பயனாளிகள் தாம் பெற்றக் கடன் தொகையை வெட்டிவேர் சாகுபடியில் முழுமையாகப் பயன்படுத்தி, சிறப்பான முறையில் விவசாயம் செய்து நல்ல முறையில் இலாபம் ஈட்டி வருகின்றனர். வெட்டிவேர் சாகுபடியில் வியாபாரிகள் நேரிடையாகவே நிறுவனத்திற்கு வந்து கொள்முதல் செய்வதால் நல்ல விலை கிடைக்கின்றது. ஒரு டன் வெட்டிவேர் ரூ. 75,000/- முதல் ரூ. 1,00,000/- வரை விற்கப்படுகின்றது.

மேலும் இவர்களின் ஸ்ரீ கிருஷ்ணா வெட்டிவேர் சாகுபடி கூட்டுப் பொறுப்புக் குழு நாபின்ஸ் நிறுவனத்திடம் பெற்ற கடன் தொகையை முழுமையாகத் திருப்பி செலுத்தியுள்ளனர். மேலும் இக்குழுவினரின் நேர்மை மற்றும் வளர்ச்சியினைக் கண்டு பல்லவன் கிராம வங்கியினர் மீண்டும் கடன் வழங்க முன் வந்துள்ளனர்.

"தங்களின் நிலை உயர்ந்ததற்கு தங்களின் உழைப்பு மற்றும் சுனாமிக்குப் பின் நிலைத்த வாழ்வாதாரத் திட்டத்தின் ஆதரவும் தான் காரணம்" என்று கூறுகின்றனர் இக்கூட்டுப் பொறுப்புக் குழுவின் உறுப்பினர்கள். ■

முதலாம் அரையாண்டு செயல் திட்டம் – விழுப்புரம் மாவட்டம்

சுனாமிக்குப் பிந்தைய நிலைத்த வாழ்வாதாரத் திட்டத்தின் சார்பில் விழுப்புரம் மாவட்டம், கூனிமேடு ஊராட்சி அளவிலான குழுக் கூட்டமைப்பில் முதலாம் அரையாண்டு செயல் திட்டங்களுக்கான கருத்துப் பட்டறை நடைபெற்றது.

இக்கருத்துப் பட்டறையில் கூட்டமைப்பின் கடந்த கால வளர்ச்சித் திட்டங்கள், கூட்டமைப்பு மூலம் செயல்பட்டு வரும் குடியிருப்பு மன்றங்கள். மகளிர் சுய உதவிக் குழுக்களின் மூலம் மேற்கொள்ளப்படுகின்ற வளர்ச்சிப் பணிகள் குறித்த திட்ட நடவடிக்கைகள் சார்ந்த கலந்துரையாடல் மேற்கொள்ளப்பட்டது.

இந்தக் கருத்துப் பட்டறையில் மாவட்ட செயலாக்க அலுவலர், நிதி மற்றும் நிர்வாக அலுவலர், சமுதாய வளர்ச்சி அலுவலர், கண்காணிப்பு மதிப்பீட்டு அலுவலர், மாவட்ட ஒருங்கிணைப்பாளர், கூட்டு வள மைய பணியாளர்கள், கூட்டமைப்பு நிர்வாகிகள், கூட்டுப் பொறுப்புக் குழு தொழில் செய்யும் உறுப்பினர்கள், சாண எரிவாயு கலன் அமைத்த பயனாளிகள், துயர் குறைப்பு நிதி பெற்ற உறுப்பினர்கள் ஊரக வளர்ச்சி தொடர்பு அலுவலர்கள், கால்நடைத்துறை மருத்துவர், பல்லவன் கிராம வங்கி மேலாளர் ஆகியோர் கலந்து கொண்டனர்.

கூட்டமைப்பின் உறுப்பினர்கள் வீட்டில் உள்ள கறவை மாடுகள், ஆடுகள் போன்றவற்றிற்கு நோய் தடுப்பு நடவடிக்கைகள், காப்பீடு செய்தல் போன்ற விபரங்களை விபரமாக, பயிற்சியில் கலந்து கொண்டவர்களுக்கு கால்நடைத்துறை மருத்துவர் எடுத்துக் கூறினார்.

பல்லவன் கிராம வங்கி மேலாளர் கூறுகையில், “மகளிர் சுய உதவிக் குழுக் கூட்டங்களை மாதம் தவறாமல் நடத்த வேண்டும், மாதம் தவறாமல் சேமிப்பை செலுத்த வேண்டும், பதிவேடுகளையும், உள்கடன் விபரங்களையும் முறையாகப் பராமரிக்க வேண்டும், குழுக்கள் மாதம் தவறாமல் வங்கி மூலம் நிதி பரிவர்த்தனைகளை மேற்கொள்ள வேண்டும்” என்று அறிவுறுத்தினார்.

மேலும் வரும் நிதியாண்டில் என்னென்ன பணிகள் மேற்கொள்ள வேண்டும் என்பதை பற்றி விவரிக்கப்பட்டு கூட்டமானது இனிதே நிறைவு பெற்றது. ■

சுய உதவிக் குழு மகளிரின் உற்ற தோழியான முற்றம் இதழிற்கு சந்தாதாரர்களை சேர்த்திட அனைத்து மாவட்ட மகளிர் திட்ட செயலாக்க அலகுகளுக்கும் இலக்கு நிர்ணயிக்கப்பட்டிருந்தது. அதன் அடிப்படையில் முற்றம் இதழுக்கு சந்தா சேர்ப்பதற்கு நடவடிக்கை மேற்கொண்டு, சந்தாக்களை சேர்த்த அனைத்து மாவட்டங்களின் மகளிர் திட்ட செயலாக்க அலகுகளுக்கும் முற்றம் இதழ் நன்றியையும், பாராட்டுகளையும் தெரிவித்துக் கொள்கிறது. தொடர்ந்து இவ்வாண்டும் முற்றம் இதழிற்கு சந்தா சேர்க்க நிர்ணயிக்கப்பட்டிருக்கும் இலக்கை நிறைவு செய்திட அனைத்து மாவட்டங்களின் மகளிர் திட்ட செயலாக்க அலகுகளும் நடவடிக்கை மேற்கொள்ள முற்றம் இதழின் சார்பாகக் கேட்டுக் கொள்கிறோம்.

முற்றம் இதழிற்கு சந்தாதாரர்களை சேர்த்து வரும் அனைத்து மாவட்ட தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதார இயக்கத்தின் திட்ட இயக்குநர்கள், அனைத்து மாவட்டங்களிலும் செயல்படும் மகளிர் திட்ட செயலாக்க அலகுகளின் அலுவலர்கள், அனைத்து உதவித் திட்ட அலுவலர்கள், வட்டார வளர்ச்சி அலுவலர்கள், உதவி வட்டார வளர்ச்சி அலுவலர்கள், ஊராட்சி அளவிலான கூட்டமைப்புகள், சுய உதவிக் குழுக்கள், கிராம வறுமை ஒழிப்புச் சங்கங்கள் ஆகியவற்றின் நிர்வாகிகள் மற்றும் உறுப்பினர்கள் உட்பட அனைவருக்கும் முற்றம் இதழ் சார்பாக நன்றியையும், பாராட்டுகளையும் தெரிவித்துக் கொள்கிறோம். ■

– ஆசிரியர், முற்றம் மாத இதழ்.

முற்றம் இதழில் வெளியிடப்பட வேண்டிய செய்திகள், வெற்றிக் கதைகள் ஆகியவற்றை பிரதி மாதம் 5ஆம் தேதிக்குள் முற்றம் இதழிற்கு அனுப்பி வைக்கவும். மேலும் புகைப்படங்களை தெளிவாகவும், நல்ல தரத்துடனும் அனுப்பவும். செல்போனில் எடுக்கப்படும் புகைப்படங்கள், வாட்ஸ்அப்பில் அனுப்பப்படும் புகைப்படங்களை அனுப்புவதை தவிர்க்கவும். புகைப்பட கருவியில் படங்களை எடுத்து அனுப்பவும். ■

கூட்டுப் பொறுப்புக் குழு கடன் – மாடு வளர்த்தல்
கன்னியாகுமரி மாவட்டம்

கன்னியாகுமரி மாவட்டம், மிடாலம் ஊராட்சி அளவிலான குழுக் கூட்டமைப்பில் முக்கடல் விஸ்வா மகளிர் சுய உதவிக் குழு உறுப்பினராக உள்ளது. தங்களின் செயல்பாடுகள் குறித்து குழுவின் உறுப்பினர்கள் கூறுகையில், 'நாங்கள் மிடாலம் கூட்டமைப்பில் இணைந்துள்ளோம். கானாவூரில் நடைபெற்ற குடியிருப்பு அளவிலான மன்றத்தில் நடைபெற்ற கூட்டத்திற்கு சென்றபோது நாபின்ஸ் வங்கி மூலம் தொழில் செய்வதற்கு கடன் கொடுப்பதாகத் தெரிவித்தார்கள். அதன் அடிப்படையில் நாங்கள் 5 பேரும் மாடு வளர்ப்பதில் அனுபவம் இருப்பதால் மாடு வளர்த்தல் தொழில் செய்யலாம் என்று தீர்மானித்து விண்ணப்பித்தோம்.

எங்களது விண்ணப்பமானது ஊராட்சி அளவிலான குழுக் கூட்டமைப்பில் கொடுக்கப்பட்டு பரீசிலனை செய்து, எங்களுக்கு நாபின்ஸ் வங்கி மூலம் கடன் பெற்று தருவதாக தெரிவித்தார்கள். மேலும், எங்கள் குழு உறுப்பினர்களுக்கு வள ஆதார மைய பணியாளர்களால் 4 நாட்கள் பயிற்சி அளிக்கப்பட்டது. பின்னர் நிதி ஆலோசகரால் எங்கள் குழு கடன் பெற தகுதியானது என்று தெரிவிக்கப்பட்டதால், எங்கள் குழு பங்குத் தொகையாக ரூ. 25,550/- வங்கியில் செலுத்தி முதல் தவணை கடன் தொகையாக ரூ. 2,75,000/- பெற்று நாங்கள் 5 நபர்களும் தலா ஒவ்வொரு பசுமாட்டை வாங்கினோம். பின்னர் அதற்கான தீவனம் போன்றவற்றையும் வாங்கினோம். அதன் மூலம் கிடைத்த வருமானத்தைக் கொண்டு முதல் தவணை கடன் திருப்பம் செய்தோம். பின்னர் 6ஆவது மாதம் இரண்டாவது தவணைக் கடன் தொகையாக கிடைத்த 2,10,450/- ரூபாயைக் கொண்டு 2வது பசு மாடு வாங்கினோம். தற்போது இதன் மூலம் கிடைக்கும் வருவாய் கடன் திருப்பம் மற்றும் எங்களின் வாழ்வாதாரத்திற்கு பெரும் உதவியாக உள்ளது. ■

புத்தகப் பராமரிப்பாளர்களுக்குக் கணினிப் பயிற்சி – திருவாரூர் மாவட்டம்

சுனாமிக்குப் பின் நிலைத்த வாழ்வாதாரத் திட்டத்தின் சார்பில் திருவாரூர், தஞ்சாவூர் மற்றும் புதுக்கோட்டை மாவட்டங்களைச் சேர்ந்த புத்தகப் பராமரிப்பாளர்களுக்கான பயிற்சி பட்டுக்கோட்டையில் 24.09.2018 முதல் 28.09.2018 வரை நடைபெற்றது.

திருவாரூர், தஞ்சாவூர் மாவட்ட செயலாக்க அலுவலர் திரு. எம். செல்லம், புதுக்கோட்டை மாவட்ட செயலாக்க அலுவலர் திரு. சௌந்தரராஜன் ஆகியோர் இப்பயிற்சியைத் துவக்கி வைத்தனர்.

இப்பயிற்சியில் திருவாரூர், தஞ்சாவூர் மற்றும் புதுக்கோட்டை ஆகிய மாவட்டங்களைச் சேர்ந்த 42 புத்தகப் பராமரிப்பாளர்கள் மற்றும் 11 கூட்டு வள மைய பணியாளர்கள் கலந்து கொண்டனர்.

புத்தகப் பராமரிப்பாளர்களுக்கு, அவர்களின் ஊராட்சி அளவிலான கூட்டமைப்பிலிருந்து கொண்டு வந்த கணினி மூலம் செயல்முறை பயிற்சி வழங்கப்பட்டது.

பயிற்சியில் ஊராட்சி அளவிலான குழுக் கூட்டமைப்புகள், சுய உதவிக் குழுக்கள் மற்றும் கூட்டுப் பொறுப்புக் குழுக்களின் கணக்குகள் குறித்து புத்தகப் பராமரிப்பாளர்களுக்கு பயிற்சி வழங்கப்பட்டது. இந்தப் பயிற்சி தங்களுக்கு மிகவும் பயனுள்ளதாக இருந்ததாக பயிற்சியில் கலந்து கொண்டவர்கள் தெரிவித்தனர். ■

சமுதாய உட்கட்டமைப்பு பணிகள் – இராமநாதபுரம் மாவட்டம்

தமிழ்நாடு அரசால் சுனாமிக்குப்பின் நிலைத்த வாழ்வாதாரத் திட்டத்தின் கீழ் நடைபெறும் பல்வேறு வாழ்வாதாரத் திட்டப் பணிகளில் கடலோர பகுதி வாழ் மக்களின் வாழ்வாதாரத்தை மேம்படுத்தவும், மீன்பிடி தொழிலில் பொருளாதார மேம்பாடு ஏற்படவும், மீன்பிடி தொழில் சார்ந்த உட்கட்டமைப்புகளை மேம்படுத்தும் வகையிலும் மீன் வலை பின்னும் கூடம் மற்றும் மீன் உலர்தளம் அமைக்கும் பணிகள் நுண் திட்டத்தின்படி தகுதியான இடங்கள் தேர்வு செய்யப்பட்டு பணிகள் நடைபெறுகின்றன.

மீனவர்கள் கடலுக்கு சென்று மீன் பிடித்து, வலையில் பிடிபட்ட மீன்களை சேகரித்தபின் வலையில் சிக்கி இருக்கும் கடல்பாசி, கடல் புல் ஆகியவைகளை எடுத்தல் மற்றும் வலை பின்னுதல், பழுது பார்த்தல் போன்ற பணியில் ஈடுபடுகிறார்கள். இப்பணியினை இதுநாள் வரை போதிய பாதுகாப்பின்றி தரையில் அமர்ந்து செய்து வந்தனர்.

தற்பொழுது மீன் வலை பின்னும் கூடம் அமைத்தபின், இக்கட்டிடத்தில் பாதுகாப்பாக அமர்ந்து மீன் வலைகளை சுத்தம் செய்யும் பணியை செய்ய முடிகிறது.

இது மீனவ மக்களுக்கு மிகவும் பயனுள்ளதாக உள்ளது. அதே போல் அதிகப்படியான மீன் பிடிபடும் காலங்களில் மீனை தரையில் உலர்த்தி சுகாதாரமற்ற முறையில் சேகரம் செய்து விற்று வருகிறார்கள். தற்பொழுது இதுபோன்ற இடங்களை தல ஆய்வில் தேர்வு செய்து மீன் உலர் தளங்கள் அமைக்கும் பணி நடைபெறுகிறது.

இராமநாதபுரம் மாவட்டத்திற்கு ஒதுக்கீடு செய்யப்பட்ட 730.33 இலட்சத்தில் மீன் வலை பின்னும் கூடம் (41 பணிகள்) ரூ. 417.12 இலட்சத்திற்கும், மீன் உலர் தளம் (11 பணிகள்) ரூ. 69.21 இலட்சத்திற்கும் க்கும் எடுத்து வேலை நடைபெற்று வருகிறது. மீதமுள்ள தொகை 244.00 இலட்சத்திற்கு தல ஆய்வு செய்யப்பட்டு மதிப்பீடு தயார் செய்யும் பணி நடைபெறுகிறது. ■

காப்பீடு திட்டத்தின் பயன் – இராமநாதபுரம் மாவட்டம்

சுனாமிக்குப்பின் நிலைத்த வாழ்வாதாரத் திட்டத்தின் கீழ், இராமநாதபுரம் மாவட்டம், புதுப்பட்டினம் ஊராட்சி அளவிலான கூட்டமைப்பில் ஆடு வளர்ப்பு தொழிலுக்காக ஐந்து நபர்கள் கொண்ட நட்சத்திர கூட்டுப் பொறுப்புக் குழு கடந்த 23.06.2017 அன்று தொடங்கப்பட்டது.

கூட்டு பொறுப்பு குழுவிற்கான மொத்த கடன் தொகை ரூ.2.00 இலட்சம் NAB-FINS நிறுவனம் மூலம் பெற்று சிறப்பாக செயல்பட்டு வந்தது. தற்பொழுது கூட்டுப் பொறுப்புக் குழுவின் உறுப்பினர்கள் ஒவ்வொருவரும் தலா 6 ஆடுகள் வீதம் மொத்தம் 30 ஆடுகள் வளர்த்து வருகின்றனர். இவை அனைத்திற்கும் United India Insurance நிறுவனம் மூலம் கால்நடை காப்பீடு செய்யப்பட்டது.

இக்குழுவைச் சேர்ந்த திருமதி. ஆரோக்கிய செல்வி அவர்களுக்கு சொந்தமான இரண்டு ஆடுகள் கடந்த 2018 மே 09ம் தேதி அன்று எதிர்பாராத விதமாக வெறிநாய் கடித்து இறந்து விட்டன. அதனை தொடர்ந்து இறந்த ஆடுகளுக்கு கால்நடை மருத்துவர் மூலம் பரிசோதனை செய்யப்பட்டு இழப்பீடு தொகைக்காக மாவட்ட செயலாக்க அலுவலகம் வாயிலாக விண்ணப்பிக்கப்பட்டது. இதன் மூலம் இழப்பீட்டு தொகையான ரூ. 12,000/- United India Insurance நிறுவனத்திடமிருந்து பெறப்பட்டது.

“எதிர்பாராத விதமாக ஏற்படும் இழப்புகளை ஈடு செய்திட காப்பீடு அவசியம் என்பதை சுனாமிக்குப் பிந்தைய நிலைத்த வாழ்வாதாரத் திட்டம் எடுத்துரைத்ததால் அதனை செயல்படுத்தியதாகவும், ஆபத்து காலத்தில் உதவும் உற்ற தோழனை போல்” சரியான நேரத்தில் வழிகாட்டியதால் இழப்பீடு தொகை பெற முடிந்ததாகவும்” நட்சத்திர கூட்டுப் பொறுப்புக் குழுவின் உறுப்பினர்கள் மிகவும் மகிழ்ச்சியுடன் தெரிவித்தனர். ■

தமிழ்நாடு மாநில அரசு சாரா தொண்டு நிறுவனங்கள் மற்றும் தன்னார்வலர்களின் ஆதார மையம் (TNVRC) – தேசிய வள மையம் (NRO)

தமிழகத்திற்கு கென்யா நாட்டினரின் களப்பயண வருகை

Kenya Development Response to Displacement Impacts Project

இடம் பெயர்ந்தவர்களுக்கான கென்யா வளர்ச்சித் திட்டம் - உலக வங்கி நிதியுதவியுடன் செயல்பட்டு வருகின்றது. இத்திட்டத்தின்படி கென்யா நாட்டின் நான்கு துணை ஆளுநர்கள் மற்றும் 16 உயர் அலுவலர்கள், தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதார இயக்கத்தின் செயல்பாடு களை அறிந்து கொள்ள களப்பயணமாக 2018 அக்டோபர் 7, 8, 9, 10, 11, 12 மற்றும் 13 ஆகிய தேதிகளில் வருகை புரிந்தனர்.

இக்களப்பயணத்தின் முதற்கட்டமாக 8, 9 தேதிகளில் கென்யா நாட்டின் குழுவினர், தமிழ்நாட்டில் ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறையின் சார்பில் வேலூர் மாவட்டத்தில் செயல் படும் திடக் கழிவு மேலாண்மைப் பணிகளைப் பார்வையிட்டனர்.

தொடர்ந்து 10ஆம் தேதியன்று சென்னை, எழும்பூரில் உள்ள ரமடா ஹோட்டலில் பயிற்சி துவக்க விழா நடைபெற்றது. இந்நிகழ்வில் ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறையின் கூடுதல் தலைமைச் செயலாளர் திரு. ஹன்ஸ்ராஜ் வர்மா, இ.ஆ.ப., அவர்கள், தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதார இயக்கத்தின் முதன்மை செயல் அலுவலர் திரு. பிரவீன் பி. நாயர், இ.ஆ.ப., அவர்கள், தமிழ்நாடு ஊரகப் புத்தாக்கத் திட்டத்தின் முதன்மை செயல் அலுவலர் திருமதி. ச. ப. கார்த்திகா, இ.ஆ.ப., அவர்கள் உட்பட பலர் கலந்து கொண்டு சிறப்புரையாற்றினர்.

தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதார இயக்கத்தின் கூடுதல் செயல் அலுவலர்கள் திரு. ஜா. சம்பத் அவர்கள், திரு. பா. செல்வராஜன் அவர்கள், தமிழ்நாடு மாநில அரசு சாரா தொண்டு நிறுவனங்கள் மற்றும் தன்னார்வலங்களின் ஆதார மையத்தின் முதன்மை செயல் அலுவலர் திருமதி. தீபா ராஜ்கமல் அவர்கள் மற்றும் மாநில இயக்க மேலாண்மை அலகின் உயர் அலுவலர்கள், ஆலோசகர்கள், மாநில அளவிலானப் பயிற்றுநர்களைக் கொண்டு பயிற்சி அளிக்கப்பட்டது.

பின்னர் 11, 12 ஆகிய தேதிகளில் வேலூர் மற்றும் திருவள்ளூர் மாவட்டங்களுக்கு கென்யா நாட்டுக் குழுவின் சார்பாக களப்பயணம் மேற்கொள்ளப்பட்டது.

13.10.2018 அன்று சென்னை, தியாகராய நகரில் உள்ள அக்கார்ட் ஹோட்டலில் நடைபெற்ற நிறைவு விழாவில், களப் பயணம் குறித்த கலந்துரையாடல், களப்பணி குறித்த சந்தேகங்களுக்கு கலந்துரையாடல் மூலம் கென்யா குழுவினருக்கு தெளிவாக விளக்கிக் கூறப்பட்டது.

இந்நிகழ்ச்சியின் போது கென்யா தேசக் குழுவினர் இக்களப் பயணத்தின் மூலம் சுய உதவிக் குழுக்கள், சமுதாயம் சார்ந்த அமைப்புகளை உருவாக்குதல் மற்றும் வலுப்படுத்துதல், வாழ்வாதாரத் திட்டங்களை செயல்படுத்துதல் போன்ற பல்வேறு விபரங்களை அறிந்து கொண்டதாகவும், இதேபோன்று தங்களது நாட்டிலும் செயல்படுத்த ஆர்வமாக உள்ளதாகத் தெரிவித்தனர்.

கென்யா நாட்டின் துணை ஆளுநர் திரு. கொரீர் எரிக் கிப்கோச் மற்றும் திரு. லொட்டேரி எமுரியா பீட்டர் ஆகியோர் “தமிழக மக்கள் மிகவும் எளிமையாகவும், அன்பாகவும் சிறந்த வரவேற்பு உபசரிப்புகள் அளித்தனர். இதனை என்றும் பசுமையாக நினைவில் இருக்கும் எனவும், மீண்டும் இன்னும் அதிகமாக கற்றுக் கொள்ள வருவதாகத்” தெரிவித்து, அனைவருக்கும் நன்றி கூறினர்.

தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதார இயக்கத்தின் கூடுதல் முதன்மை செயல் அலுவலர் திரு. ஜா. சம்பத் அவர்களின் நன்றியுரையுடன் விழா இனிதே நிறைவுற்றது.

உலக வங்கி ஆலோசகர் திரு. சோவிக் மித்ரா அவர்கள், தமிழகத்திற்கும், உலக வங்கிக்கும் இடையே அனைத்து செயல் பாடுகளையும் ஒருங்கிணைத்து வழி நடத்தினார். ■

சமூக உள்ளடக்கச் செயல்பாடுகள் குறித்த தேசிய அளவிலான கருத்தரங்கு

தமிழ்நாடு மாநில அரசு சாரா தொண்டு நிறுவனங்கள் மற்றும் தன்னார்வலங்களின் ஆதார மையம் (TNVRC) சார்பாக, "சமூக உள்ளடக்கச் செயல்பாடுகள் பற்றிய தேசிய அளவிலான கருத்தரங்கு" 2018 அக்டோபர் 8ஆம் தேதி முதல் 11ஆம் தேதி வரை தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு நிறுவனத்தின் பயிற்சி அரங்கில் நடைபெற்றது.

இத்தேசிய அளவிலான கருத்தரங்கில், தேசிய ஊரக வாழ்வாதார இயக்கத்தின் மூலம் தேர்வு செய்யப்பட்ட 14 மாநிலங்களைச் சார்ந்த தேசிய அளவிலான பயிற்றுநர்கள் (National Resource Persons), தேசிய ஊரக வளர்ச்சி பயிற்சி நிறுவனத்தின் (NIRD) தேசிய அளவிலான பயிற்றுநர்கள் ஹைதராபாத், தேசிய இயக்க மேலாண்மை அலகின் (NMMU) - புதுடெல்லி உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

இக்கருத்தரங்கிற்கு வருகை தந்த அனைவரையும் தமிழ்நாடு ஊரக புத்தாக்கத் திட்டத்தின் முதன்மை செயல் அலுவலர் திருமதி. ச. ப. கார்த்திகா, இ.ஆ.ப., அவர்கள் வரவேற்றார். ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறையின் கூடுதல் தலைமைச் செயலாளர் திரு. ஹன்ஸ்ராஜ் வர்மா, இ.ஆ.ப., அவர்கள், சமூக நலத்துறையின் முதன்மை செயலாளர் டாக்டர் கே. மணிவாசகன், இ.ஆ.ப., அவர்கள், மத்திய ஊரக வளர்ச்சித் துறை, இணைச் செயலாளர் திருமதி. நீதா கெஜ்ரிவால் அவர்கள், தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதார இயக்கத்தின் முதன்மை செயல் அலுவலர் திரு. பிரவீன் பி. நாயர், இ.ஆ.ப., அவர்கள், சமூக நலத்துறை இயக்குநர் திருமதி. வே. அமுதவள்ளி, இ.ஆ.ப., அவர்கள் மற்றும் தமிழ்நாடு நகர்ப்புற வாழ்வாதார இயக்கத்தின் செயல் இயக்குநர் முனைவர் ஜே. யு. சந்திரகலா, இ.ஆ.ப., ஆகியோர் இக்கருத்தரங்கில் கலந்து கொண்டு சிறப்புரையாற்றினார்கள்.

தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதார இயக்கத்தின் கூடுதல் செயல் அலுவலர்கள், இணை இயக்குநர்கள் மற்றும் உயர் அலுவலர்கள் மற்றும் தமிழ்நாடு மாநில அரசு சாரா தொண்டு நிறுவனங்கள் மற்றும் தன்னார்வலங்களின் ஆதார மையத்தின் முதன்மை செயல் அலுவலர் திருமதி. தீபா ராஜ்கமல் அவர்கள் உட்பட பலர் இக்கருத்தரங்கில் கலந்து கொண்டனர்.

தேசிய அளவிலான இக்கருத்தரங்கின் நோக்கமானது, தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதார இயக்கம் / புதுவாழ்வு திட்டம் ஆகியவற்றின் சிறப்பான செயல்பாட்டினை பிற மாநிலங்களுக்கு முன்மாதிரியாகக் காண்பித்தல், சமூக உள்ளடக்கச் செயல்பாடுகளான மக்கள் பங்கேற்பு முறையில் ஏழை மக்களை அடையாளம் காணும் வழிமுறைகள், சிறப்பு முதியோர் குழுக்கள், தனி நபர்கள் தொழில் மற்றும் கூட்டாண்மையின் மூலம் திட்டத்தின் பயன் பெறும் வழிமுறைகள், நலிவுற்றோருக்கு முன்னுரிமை அளித்தல் போன்ற பல்வேறு செயல்பாடுகள் பற்றி தெளிவாக விளக்கிக் கூறப்பட்டது.

இப்பயிற்சியின் முதல் நாள் பயிற்சியின் நோக்கம், தமிழ் நாடு மாநில ஊரக வாழ்வாதார இயக்கத்தின் சிறப்புச் செயல்பாடுகள் குறித்து பங்கேற்பாளர்களுக்கு தெளிவாக விளக்கிக் கூறப்பட்டது.

அதனைத் தொடர்ந்து அனைத்து பங்கேற்பாளர்களும் மூன்று குழுக்களாகப் பிரிந்து, களப்பயணமாக திருச்சி, திருவள்ளூர், கடலூர் மற்றும் விழுப்புரம் மாவட்டங்களுக்குச் சென்று, அங்குள்ள சுய உதவிக் குழுக்கள், ஊராட்சி அளவிலான கூட்டமைப்புகள் மற்றும் கிராம வறுமை ஒழிப்புச் சங்கங்கள் ஆகியவற்றின் நிர்வாகிகளுடன் நேரடி கலந்துரையாடல் மேற்கொண்டனர்.

பயிற்சியின் நிறைவில் தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதார இயக்கத்தின் கூடுதல் முதன்மை செயல் அலுவலர் திரு. ஜா. சம்பத் அவர்களின் நன்றியுரையுடன் விழா இனிதே நிறைவுற்றது.

இப்பயிற்சி நடைபெற்ற காலங்களில் எவ்விதமான பிளாஸ்டிக் பொருட்களும் பயன்படுத்தப் படவில்லை என்பது குறிப்பிடத் தக்கது.

இப்பயிற்சிக்கான ஏற்பாடுகளை தமிழ்நாடு மாநில அரசு சாரா தொண்டு நிறுவனங்கள் மற்றும் தன்னார்வலர்களின் ஆதார மையம் - சென்னை (TNVRC) செய்திருந்தது.

Published by by S. CHINNAPPAN, on behalf of MUTRAM SOCIETY From Tamilnadu Corporation for Development of Women's Ltd.,
Printed by S. BALASUBRAMANIAN, Works Manager 1, Government Central Press, No. 508, Mint Street, Vallalar Nagar, Chennai – 600 079.
Published from (60,200 Copies circulated) Tamilnadu Corporation for Development of Women's Ltd., Annai Teresa Mahalir Valagam,
Valluvakottam High Road, Nungambakkam, Chennai - 600 034. Editor : S. CHINNAPPAN.

மகளிர் சுய உதவிக் குழுக்கள் கடன் பெற Paisa Portel

மகளிர் சுய உதவிக் குழுக்களுக்கு கடன் வழங்குவதற்காக வங்கிகள் சார்பில் "Paisa Portel`` என்ற இணைதளம் உருவாக்கப் பட்டுள்ளது. இந்த இணையத் தளம் குறித்த விளக்கப் பயிற்சி தேசிய நகர்ப்புற வாழ்வாதார இயக்கம் சார்பில் 10.11.2018 அன்று சென்னை, அன்னை தெரசா மகளிர் வளாகக் கூட்ட அரங்கில் நடைபெற்றது.

தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதார இயக்கத்தின் முதன்மை செயல் அலுவலர் திரு. பிரவீன் பி. நாயர், இ.ஆ.ப., அவர்கள், செயல் அலுவலர் முனைவர். ஜே. யு. சந்திரகலா, இ.ஆ.ப., அவர்கள், கூடுதல் முதன்மை செயல் அலுவலர் திரு. ஜா. சம்பத் அவர்கள் மற்றும் தேசிய நகர்ப்புற வாழ்வாதார இயக்கத்தின் அலுவலர்கள் "Paisa Portel`` இணையதளம் குறித்தும், "MIS Portel``குறித்தும் விளக்கினர்.

இந்தக் கூட்டத்தில், சுய உதவிக் குழுக்களில் உள்ள மகளிருக்கு தனிநபர் கடன் மற்றும் மகளிர் சுய உதவிக் குழுக்களுக்கு வட்டி மானியம் வழங்குவதை உறுதிப்படுத்த வங்கிகள் மூலம் நேரடியாக வழங்குவதை "Paisa Portel`` இணையதளத்தில் பதிவு செய்ய வேண்டும் என்று விளக்கப்பட்டது. இப்பயிற்சியில் அனைத்து மாவட்ட இயக்க மேலாண்மை அலகின் பணியாளர்களும் கலந்து கொண்டனர். ■

மாநில ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி நிறுவனம்,

SIRD & PR - Tamil Nadu

ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை, தமிழ்நாடு அரசு

மறைமலை நகர் - 603 209.

“ஊரக உள்ளாட்சி நிர்வாகம்” குறித்த மூன்று மாத சான்றிதழ் படிப்பு

Certificate Course on "PANCHAYAT RAJ ADMINISTRATION"

மாநில ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி நிறுவனம் (SIRD & PR - TN) தேசிய ஊரக வளர்ச்சி மற்றும் பஞ்சாயத்து ராஜ் (NIRD & PR - Hyderabad) நிறுவனத்துடன் இணைந்து, **“ஊரக உள்ளாட்சி நிர்வாகம்”** குறித்து மூன்று மாத சான்றிதழ் படிப்பை அறிவிக்கிறது. இந்த சான்றிதழ் படிப்பினை அனைத்து அரசு அலுவலர்கள், பணியாளர்கள், பயிற்றுநர்கள் மற்றும் விருப்பமுள்ள பொதுமக்கள் பயிலலாம். இந்த சான்றிதழ் படிப்பிற்கான விண்ணப்பம் மற்றும் விபரங்களை பெற இந்த மின்னஞ்சலுக்கு tnsird.certificatecourse@gmail.com கேட்புக் கடிதம் கொடுத்து, மின்னஞ்சல் மூலம் பெற்றுக் கொள்ளலாம்.

RNI No. TNTAM/1999/02733-TAMILNADU MAKLIR MAMPATTU MURTRAM R.DIS 1722 / 2016
Reg. No. TN/CH/(C)/455/2018-2020 & Licensed to Post Under without Prepayment TN/PMG(CCR)/WPP-564 / 2018-2020
Date of Publication : 2nd Week of the every month

கழிவறை பழக்கம், உடல்வளர்ச்சி, ஆரோக்கியம் மற்றும் அறிவு வளர்ச்சியின் அடையாளம்

சுகாதாரமான வாழ்க்கைக்கு பத்து கட்டளைகள்

சுகாதாரமாய் வாழ்ந்திடுவோம்! உடல் நலத்தை காத்திடுவோம்!